[illegible]

V5 NO. 41 20 Oct 1932

©

JL
[illegible],N28K
N32.5 41
188976

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

12 DEC 1932

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை

Vol 5.] 1932 ஹூ அக்டோபர் மீ 20உ [No. 41

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 801
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 803
3. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 805
4. குடிவாழ்க்கை (Plato's Republic)
K. இராஜகோபால் 806
5. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 10-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 808
6. பொதிகைநிகண்டு (ஒலிபற்றிய பெயர்த் தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 811
7. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 2, 3) 812
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம். B.A. B.L. 814
9. சொல்லூடாட்டம் 10. 816
10. வர்த்தமானம் 819

கலாநிலயம்

பொய்ப்பிறவி

அந்தத்தில் ஒருவன் செய்வதுதான் யாவதேயாயினும் முந்திக்கொள்ளும் சிந்தனையேனும் செவ்விதாயிருக்கலாமே. செய்கைக் கிடையூறுகள் புறத்திருந்து பல புகுந்து தடுக்கநேர்வதால் இது இனி இயலாதெனமக்களிற் பெரும்பாலோர்கைசோர்ந்துவிடுகின்றனர். செய்கைக்கிருக்கும் இத்தகைய இடுக்கண் சிந்தனைக்கில்லை. தூய தூண்டல்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தாமே தோன்றுகின்றன. அவைகளை ஒளித்தால் ஒளிக்கலாமே யொழிய அறவே சிதைத்தழித்துவிடுகின்ற ஆற்றல் யாருக்கும் எதனிற்கும் இல்லையே. பிச்சைக்காரன் தன்வயிற்றையும் வாயையுங்காட்டி இரக்கின்றபோது, அவனுக்கு ஒரு காசு கொடுப்பதற்கே நம் மனம் எழுகின்றது. இவ்வெழுச்சி அடையாதார் பதினாயிரத்திலொருவரும் இரார் என்பது திண்ணம். எனினும் இன்னுமொன்றுந் திண்ணமே. அவ்வெழுச்சி அடைந்தவர்களில் பதினாயிரத்திலொருவரேனும் கொடுக்கின்றனரோஎன்று துணிந்து கூறலருமை. கொடுக்கவேண்டுமென மனம் முதலில் எழுவதற்குக் காரணமாய சிந்தனை எதுவென்று குறிக்கத்தகுந்தது ஒன்றுமில்லை. அவன்கேட்கின்றான் என்ற பான்மையே இவனுடைய கொடையின் நினைவிற்குக் களமாகின்றதன்றி வேறோர் காரணம் வகுப்பது மிகை. கொடுக்கவேண்டுமென்ற தூண்டல் எழுந்தகாலத்தும் கொடையாகிய செய்கை நிகழாமல் நிற்பதற்கோ காரணங்கள் உள. அவைதாம் யாவை யென்பதை அறிந்துகொண்டால், அவ்வறிவை ஆதாரமாகவைத்து அவ்வாழ்க்கை எதுவென்பதையேனும் தெரிந்திடற் கியலும்.

இருகூறுடைத்து இம் மாநுடம். ஒன்று, தன்னைத் தொடர்ந்துவரும் மிருகத்தன்மையும், மற்றது தான் தொடர்ந்துசெல்லும் கடவுள்நிலையும் ஆகும். மாக்களாயிருந்தவைகளே மேன்மேல் சிறப்புற்றுத் தலைமுறைக்குத் தலைமுறை மாறிமாறி வளர்ந்து மக்களாயினவென்பது உயிர்நூலாளர் உரைப்பதோர் உண்மை (biological truth). இதன்படி விலங்கின் அவயவங்கள் வேற்றுருப் பெற்று மனிதனில் விளங்குகின்றனவேனும், விலங்கின் குணங்களில் பற்பல மாறுமலேநின்று மனிதனில் விவகரிக்கின்றன. ஆதலின், மனிதனை விடாமற் பற்றிவரும் விலங்கென்று இதனையே அழைத்தோம். இனி இம்மாநுடமே, வளர்ச்சிமுறைப் போக்கின் முற்றிய முடிவு அன்று என்றும் அவ் வுயிர்நூலாளர் கூறுவார். இன்னமும் இம்மாநுடம் மாறிமாறித் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்து வேறோர் நிலையை அடைய வழிக்கொண்டிருக்கின்றதென்பதே அவர்தம் சாத்திரத்தின் துணிவு. மாநுடங் கடந்த மனிதன் (superman) என்னும் பெயர் அந்நிலைக்கு வழங்கப் பெறுகின்றது. இதனையே நாம், மனிதன் தொடர்ந்து செல்லும் கடவுள்நிலை என அழைத்தோம். ஆதலின் முன்னைய விலங்கும் பின்னைய கடவுளும் ஆகிய இவ்விருகூறும் இருக்கப்பெறுவது இம்மாநுடம். இவ்விரு கூறுகளும் உண்மை.

இனி, மற்ற வேற்றுமைகளெல்லாம் ஒருபுறமிருக்க, விலங்கிற்கும் கடவுளிற்கும் இடைகிடக்கும் வேற்றுமையை ஈகையின்திறத்தில் தனித்துக் காணலாம். தெய்வத்தன்மை என்னப்படுவது இரக்கம்; அவ்விரக்

கத்தின் [illegible]தியே ஈகை. தன்னையே தமர்க்கு நல்கும் தனி[illegible]பெருந் தகைமை கடவுளின் சிறப்பைக் காட்டு[illegible]றது. கடவுட்டன்மையின் சிறப்பியல்பு ஈகை. இரக்கத்தின் தன்மையை எடுத்தியம்பிய ஷேக்ஸ்பியர், "It is an attribute to God Himself" என விளம்பியுள்ள வாசகத்தின் பெருமை, இந்தக் கண்கொண்டு ஆராயுங்கால், அளப்பரிய உண்மையோடு திகழ்கின்றது. இதற்கெதிர், விலங்கினோடு சேர்க்கமாட்டா ஒரு தனித்தன்மை இவ்வீகை. இரையைத் தின்றிருக்கும் புலியின்பால் பசித்த புலி மற்றொன்று வந்து இரந்துண்டது என்பது யாண்டுமில்லை. வந்தபுலிவலியதாயின் பொருதுகவர்வதல்லால் வேறுநெறி நினைப்பதுமில்லை. இந்தப்புழு, இந்த முதலை, இந்த ஒந்தி, இந்தக் கழுகு, இந்தப் புலி ஈயும் இயற்கையுடைத்து என்று எவரேனும் சொல்லத்தான் நினைப்பாரோ.

நன்று: ஈயாமை விலங்கின் இயற்கையும், ஈகை தெய்வத்தன்மையும் ஆவது கண்டோம். விலங்கினின்று பிறந்து கடவுளைப் பெறவிருக்கும் மாநுடம், அரிமா நோக்காக அவ்விரண்டையும் அளாவுகின்றது. வறியோர் பலர் தம் வயிற்றிற்கும் உணவிற்கும் இடையே நெடுந்தூரம்வைத்து வாடிக்கிடக்க, அவ்வறுமையினை ஓரளவு குறைக்கக்கூடிய நிலைமையிலிருக்கும் எத்தனையோ பலர் அது செய்யாமல் சும்மாபோகின்ற சூழ்ச்சியை நினைக்குந்தோறும் மனமோ நோகின்றவர்களாகி, இனித் தாம் எய்த இருக்கும் கடவுள்நிலையின் நினைவினால் தூண்டப்பெறுகின்றார். ஏந்திய கையனாய் எதிர்நிற்குமோர் இரவலனுக்கு எடுத்தளிக்கத் தூண்டுவதும் அவர்பால் இருக்கும் அக் கடவுட்பங்கே. எனினும், நொந்த மனத்திற்கோர் மருந்தும், கொடுக்கவேண்டிய கைக்குக் கோலும் தேடுகின்றனரேயன்றி வறியோர்க்குதவும் ஈவாரைக் காண்பது எங்கும் இத்துணை அரிதாகிக்கிடப்பது அதிசயமன்றெனினும் ஆராயற்பாலதாம்.

மற்றென்: கொடுக்கத்தூண்டுவது நாம் தொடர்ந்து செல்லும் கடவுட் குணமாக, கொடுக்காமற் றடுப்பது நம்மைத் தொடர்ந்து வரும் விலங்கின் குணமென்றும், இக்குணம் வலுத்ததால் எடுத்தகை படுத்ததென்றும், இவ்விபரீதத்திற்கு விடை இயம்பச் சிலர் நினைக்கலாம். ஆயினும், அதுவோ அத்துணை எளியதன்று. ஈயவேண்டும் என்னும் எண்ணத்தை விலங்குகள்கொள்ளாததற்கு, கடவுள்நினைவு அவைகளின்பால் இல்லாமையே காரணம்என்று எதிர்மறையில் வாதிப்பதல்லால், அவை தாம் என்ன நினைவுபற்றி ஈயமறுக்கின்றனவெனச் சிந்தித்துரைக்கயாரேவல்லவர். எனினும், "நான் கொன்ற இரை இது, நான் உண்பேன், உனக்கு ஏன் கொடுக்கவேண்டும்" என்னும் வகையில் பணக்காரப் புலி ஏழைப்புலிக்குக் கொடுக்க மறுத்துவிடுகின்றதென ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். மற்று, "நான்-நான்" என்பதன்றி வேறொருசிந்தனையும்உணர்வும் இல்லாமையால், மற்றோர் புலியுடன் தொடர்புகொள்ள அதற்கு ஆதாரமில்லை என்று எண்ணினும் எண்ண இயலும்.

காரணம் எதுவாயினும் ஆகுக; கொடுக்காத புலியே கோடிபெறும். மறுக்கின்றமாநுடத்தின்மாயமோ மிகக் கொடிது. தற்கால மேனாட்டு நூலாசிரியரொருவர், நுண்ணியவுணர்வுடன் தத்துவச்சிறப்பும்வாய்ந்தவர் ஜான் கூபர் போவிஸ்(John Cowper Powys) என்பவர்,

The most hones[illegible] thing to do is to face our human selfishness to the very dregs, We are not fish; we are not foxes; we are not sheep. We are worse. We are men.

என மாநுட மானம்போகக் கழறிய அம்மொழிகளைக் கருதுங்கால்"அரிதரிதுமானிடராதலரிது"என்றதெல்லாம் அதனைப்பாடிய பண்டைக்காலத்திற்கேஏற்றதாக அமைந்ததுபோலும்என ஐயுறவேண்டியிருக்கின்றது. அது எவ்வாறாயினும், ஈயாதிருப்பதற்கு இம்மனிதன் சூழும் உபாயங்களில் இவ்விழிவைக் காணலாம். இர[illegible]கின்ற பிச்சைக்காரனுக் கொன்றுங் கொடாமல் [illegible] முகமுந் தானுமாய் அகல்பவன், தன் மனத்தின் தெய்வத் தூண்டலைத் தணிப்பதற்கு உபாயங்களாய்க் கற்பித்துக்கொள்ளும் வஞ்சனையுடையநினைவுகள் பெரும்பாலும் பின்வரும் இனங்களில் அடங்கும். "இவன் கள்வன். இவனது வறுமைவேடம் பொய். வட்டிக்குச் சிறு தொகைகள் கடன்கொடுக்கின்ற பிச்சைக்காரர்களையும் யான் கண்டிருக்கின்றேன்—இவன் காட்டும் நோயும் குருடும் ஊமையும் முடமும் பஞ்சக்கோலமும் யாவும்பொய்.இவன் சோம்பேறி, இவனுக்குக்கொடுத்தால் நம்நாடே கைத்தொழில் வர்த்தகம் முதலிய வளர்ச்சிகள் குன்றிக் கெட்டுவிடும். பிச்சையெடுத்த காசைக் கொண்டுநேரேஇவன் இன்றுகள்ளுக்கடைக்குத்தானே செல்வான். அரசாங்கம் நகரச்சபை முதலியவைகளல்லவோ இவர்களைக் காப்பாற்றவேண்டும். அன்னதான சமாஜத்திற்குப் போய் இவன் வேண்டியஉணவுபெறட்டுமே. நான் படுகின்ற கஷ்டம் கொஞ்சமன்று, அதனிடையில் இவனுக்குக் கொடுக்கவேண்டுமோ! இவனிருந்து என்ன செய்கின்றான், சாகட்டுமே. இவையெலாம் கிடக்க, நான் கொடுக்கும் ஒரு காலணா இவன் வயிற்றிற்குப் பற்றுமோ!

இத்தனையும் பொய்; ஆயினும் இவைகளை ஒவ்வொன்றாய் எடுத்திங்கு ஆராய நினைத்திலம். இவ்வளவு காரணங்களையுங் கடந்து கொடுப்பதே கடமை என்பதை ஒவ்வொருவர் நெஞ்சமும் உண்மையாக அறியும். அயோத்திமாநகரில், கொள்வாரிலாமையால் கொடுப்பார்களில்லை என்றார் ஒரு மெய்யறிபுலவர். இக்காலத்துப் பொய்ம்மனிதர் சிலர், முறையை மாற்றி, கொடுப்பாரிலாமையால் கொள்வாரிலராகும்படி செய்து நாட்டின் நன்மையை நிலைநிறுத்த முயலவேண்டும் என்று ஓயாத ஊக்கம் ஓங்கவோங்கப் பிரசங்கங்கள் செய்யக் கேட்டிருக்கின்றோம். இவைகளெல்லாம், தம்மைப்போல், மற்றவர் இதயங்களிலும் இருந்து ஈகையின்பால் தூண்டும் தெய்வசிந்தனையைத் தொலைத்தற்கு முயல்கின்ற செய்தியேயன்றி வேறன்று. இத் தெய்வக்கொலைப் 'பிரசாரம்' பண்டுவாலிழந்நரியின்மரபில் பிறந்து வளர்வதொன்று. மெழுகென உருகும் இயற்கையுடைய இதயத்தை இரும்பாக்கிக்கொள்ளவேண்டுமென்று விரும்புகின்றவர்க்குப் பொல்லாத உதவியாய் உடனின்று எஃகுமாக்கி யனுப்புகின்ற கொடிய வாசகங்கள் இவை. இதற்கெதிர், நல்லறிவும் நன்மனமுமுடைய ஜான் கூபர் போவிஸ், பிச்சைக்கார வேடம் எத்தகைத் தென்பதையும் அவர்களுக்குக் கொ[illegible] எடுத்துரைக்கும் இவ்வா[illegible]

கங்கள், அவ்விரும்பைப் பொன்னாகச் செய்யும் இரச வாதம் போல்கின்றன.

To give money to tramps and "bums" is like giving money to disguised gods. It is the plain duty of everyone who can boast "a home". It is **not** "encouraging idlers." It is encouraging the highest life. It is on a par with giving alms to pilgrims or leaving offerings of food outside a hermit's cave.

Think what a burden of possessions these lonely wayfarers have shaken off. Money is the root of all evil; they have none. Relatives dependants, houses, and cattle, offices, shops, and investments—these are the loads which weigh a person down, and lead him to sell his very soul. They have none of these. What they enjoy is **the pure sensation of life**, the sort of thing that the saints are seeking. They neednot consider their dignity. They need not fuss about their health. Life is always close to death with them; and of this closeness, surely the proverb holds good, "The nearer the bone, the sweeter the meat." They enjoy habitually what so many people sigh for and never taste —a living Nirvana!

இது யாருக்குத் தெரியாது? தெரிந்திருந்தும் இத யத்தின் வாயைப் புதைப்பதில் எது பயன்? ஒன்று, விலங்கேயாகநின்று "கொடுக்கமாட்டேன், நானே உண்பேன்" என்று, வெளிப்படையாக உள்ளிருக்கும் உண்மையைச் சொல்லுங்கள். நம்மைத் தொடர்ந்து வரும் விலங்கின் கூற்றாகிய இது முற்றிலும் மெய். அல்லது, மற்றொன்றும் பேசாமல் கொடுத்துவிடுங்கள்; தொடர்ந்து செல்லும் கடவுள் கூற்றாகிய இதுவும் மெய். இவ்விருதிறத்தோர்க்கும் உய்வுண்டு. ஏனெனில் இன்னவர் நிற்கும் நிலையில் வஞ்சனையில்லை. விலங்கினை விலங்காகவே நடத்துகின்றபடியால் ஒருகால் ஒருநாள் தன்னைக் கண்டு தானே நாணமடைந்து தெய்வமாக மாற நினைப்பினும் நினைக்கலாம். மற்று, கொடாமைக்கு நியாயப் பொய்கள் வலிந்து தேடிக்கொள்ளும் இச்சூழ்ச்சி மானிடத்திற்கே உரியது. தன்னைப்பெற்ற விலங்கையும், தான் இனிப் பெறவிருக்கும் கடவுளையும் ஒருங்கே பொய்த்துவாழ்கின்ற சூழ்ச்சிக்கே மாநுடம் என்ற பெயர்பெரிது பொருந்தும். இந்நிலையினை உணர்ந்து இப்பொருளில் தான் இதனை, "பொய்ப்பிறவி" என்று அழைக்கின்றனர் போலும். எனின், சிவபிரான் அளித்த வரத்தையும் மறுத்து, மானிடமாய்ப் பிறக்க அஞ்சிய அவ்வானர முசுகுந்தனைக் கந்தபுராணமுடையவர் காட்டிய பரிசு யாதினும் உயர்ந்ததோர் இரகசியத்தை வெளிப்படுத்துகின்றதென்பதற்கு ஐபமுண்டோ?

தமிழ்ப் பாடம் 41.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[786-வது பக்கத் தொடர்ச்சி]

எண்ணிய வெண்ண முடிப்ப விகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கிக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து. 101.

பதப்பிரிவு:—எண்ணிய எண்ணம் முடிப்ப இகல் வேந்தன் கண்ணியதை அறிந்து காய் கலியும் பண்ணினுக்கு கேள் ஆன தேன் மொழியை நீக்கி கிளர் ஒளி சேர் வாளாய் மருங்கு இருந்தான் வந்து.

அன்வயம்:—காய் கலியும், இகல் வேந்தன் கண்ணியதை அறிந்து, பண்ணினுக்குக் கேள் ஆன தேன் மொழியை நீக்கி(தான்) எண்ணிய எண்ணம் முடிப்ப வந்து, கிளர் ஒளிசேர் வாளாய் மருங்கு இருந்தான்.

பதவுரை.

காய் - (யாவரையும்) வருத்துகின்ற
கலியும் - கலியும்,
இகல் - வெற்றிபொருந்திய
வேந்தன் - நளராசன்
கண்ணியதை - நினைத்ததை
அறிந்து - தெரிந்துகொண்டு,
பண்ணினுக்கு - இசைக்கு
கேள் ஆன - உறவாகிய
தேன் - தேன்போன்று இனிய
மொழியை - சொற்களைப் பேசும் தமயந்தியை
நீக்கி - (அவனைவிட்டுப்) பிரித்து,
எண்ணிய - (தான் முன்னரே) எண்ணியுள்ள
எண்ணம் - எண்ணத்தை
முடிப்ப - முடித்துக் கொள்ளும்பொருட்டு
வந்து - அங்கு வந்து,
கிளர் - பிரகாசிக்கின்ற
ஒளி - ஒளியை
சேர் - உடைய
வாள் ஆய் - வாளின் உருவம் ஆகி
மருங்கு - பக்கத்தில்
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—'தமயந்தியைவிட்டு நளனைப் பிரித்து வருத்துகின்றேன் பார்' என்று முன் வஞ்சினம் கூறியுள்ள கலி அதனை முடிப்பதற்கு இதுவே ஏற்ற சமயம் எனத் துணிந்து, ஒற்றை ஆடையை இருவரும் இருபுறத்திலும் புனைந்திருக்கின்றாராதலால் தமயந்தியின் துயிலைக் கலைக்காமல் அகலும்வகை யறியாமல் திகைத்த நளனுக்கு முன்னே அக் கலி இப்பொழுது ஒரு வாளின் உருவெடுத்துக் கிடந்தான்.

"பண்ணினுக்குக் கேளான தேமொழி" என்று தமயந்தியைக் குறிப்பது, "பேசுகின்ற மொழிகளே பாட்டிற்கு நிகரான இனிமை வாய்ந்தவள்" என்னும் கருத்தை யுடையது. கம்பரும், "எழிலிசை மடந்தையர் இன்சொல் இன்னிசை" என்பர்.

ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக
முற்றுந்தன் னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவணிலைமை நெஞ்சில்
தெரிந்தா னிருந்தான் றிகைத்து. 102.

பதப்பிரிவு:—ஒற்றை துகிலும் உயிரும் இரண்டு ஆக முற்றும் தன் அன்பை முதலோடும் பற்றி அரிந்தான் அரிந்திட்டு அவள் நிலைமை நெஞ்சில் தெரிந்தான் இருந்தான் திகைத்து.

அன்வயம்:—முற்றும் தன் அன்பை முதலோடும் பற்றி, ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக அரிந்

தான். அரிந்திட்டு அவள் நிலைமை நெஞ்சில் தெரிந்தான், திகைத்து இருந்தான்.

பதவுரை.

முற்றும் - முதிர்கின்ற
தன் - தன்னுடைய
அன்பை - அன்பையே
முதலோடும் - முழுவதும் [கொண்டு,
பற்றி - தனக்கு ஊன்றுந் துணையாகப் பிடித்துக்
ஒற்றை - ஒன்ருகிய
துகிலும் - வஸ்திரமும்
உயிரும் - உயிரும் [களை
இரண்டு ஆக - இரண்டாகும்படி [நளன் அவை
அரிந்தான் - (அவ்வாளால்) வெட்டினன்.
அரிந்திட்டு - வெட்டிவிட்டு
அவள் - தமயந்தியின்
நிலைமை - நிலைமையை
நெஞ்சில் - தன் மனத்தில்
தெரிந்தான் - உணர்ந்து
திகைத்து - திகைப்படைந்து
இருந்தான் - இருந்தான்.

விரிவுரை:—முன், இவ்விருவருக்கும் "ஆவிபோல் ஆடையும் ஒன்ருயதே', என்றதற்கேற்ப இங்கு அவை இரண்டையும் வேருகப் பிரித்துக்கொண்டு நளன் போனன் என்பதால் கதையோடு உவமையும் தொடர்கின்ற நயம் சிறந்து விளங்குகின்றது. நளன் அரிந்தது துகிலையும் உயிரையுமே, அன்பை அன்று. ஆதலால், "முற்றும் தன் அன்பை முதலோடும் பற்றி, அரிந்தான்" எனச் சேர்த்து, "முதிர்கின்ற தனது அன்பை வேரோடு பிடித்து வெட்டிவிட்டான்" என்று பொருள் கொள்ளப்படாது. கொண்டால் தமயந்தியின் பால் தனக்கிருந்த அன்பையெல்லாம் சிதைத்துவிட்டுப் போனன் என்ற பழி நளனைச்சேரும். அவள்பால் இவனுக்கு அன்பு மேன்மேலும் முதிர்வதால்தான், அவளேனும் அல்லல்படாமல் தந்தையின்மனை சேர்ந்து தங்கட்டும் என்னும் எண்ணம் பிறக்க, வலிந்தேனும் அவளை விட்டுப் பிரிதலின் தகுதிநோக்கி இவ்வாறு செய்கின்றவன் ஆயினன். எனினும், உயிரிற்கு உயிராய தமயந்தியைத் தனியே விட்டகல்வது நளனுக்குச் சுலபமன்று. ஆதலால் அவனுக்கு இக் காரியம் செய்யப் பற்றுக்கோலாக ஓர் துணை வேண்டியிருந்தது. அப்படி ஒரு கையால் ஊன்றி நின்று, மறுகையால் உயிரை அறுப்பதற்கு வகை தேடியபோது முதிர்ந்த அன்பே பற்றிநிற்கும் மரமாய் இவனுக்கு உதவியது என்பது இச்செய்யுளின் இரண்டாவது அடியின் கருதது. அன்பைப்பற்றிக்கொண்டு, துகிலும் உயிரும் இரண்டாக அரிந்தான், என்று சேர்த்துக்கொள்வதே நலம்.

குறிப்பு:—(1) "ஒற்றைத் துகிலு முயிரும் இரண்டாக அரிந்தான்," என்பதில் புணர்நிலையணி என்னும் ஓர் அணி அடங்கி யிருக்கின்றது. இரண்டு வேறுவேருன விஷயங்களை ஒன்ருய் ஒரு சொல்லைக்கொண்டு பொருந்தும்படி செய்வது இவ்வணியின் இலக்கணம். இதனல், ஆடும் மாடும் வந்தன, தகப்பனும் தாயும் உண்டனர், என்றுரைப்பதெல்லாம் புணர்நிலை அணியென எண்ணவேண்டா. புலவர்தம் திறத்தினல் கேட்போருக்கு இனிமை உண்டாகும்படி சொல்வதுதான் அணி எனப்படும். ஆடும்மாடும் வந்தன என்பதில் புலமை ஒன்றும் இல்லை; ஆதலால் அணியும் இல்லை.

இரண்டு பொருள்கள் அணிபெறும்படி ஒன்றுசேரப் புணரும்போது அவை ஆடும் மாடும் வந்தன என்பதுபோல் நேராகப் பொருந்தாமல் ஒன்று உண்மையாகவும் மற்றது அதற்கு உவமை சிலேடை முதலியவைகளின் உதவியால் நிகராகவும் அமைந்து பொருந்துவது இயல்பு. ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக அரிந்தான் என்ற இடத்தில் ஒற்றைத்துகில் இரண்டாவது உண்மை; உயிர் இரண்டானதற்கு அவர் துகில் இரண்டானதே உவமைபோல் நிற்கின்றது.

முன், "வாசம்மலர்ந்த தேங்கோதையாள் ஆழ்துயரத்தோடு புலர்ந்ததே அற்றைப் பொழுது" என்று சுயம்வரகாண்டம் 114-வது செய்யுளில் (428-வது பக்கம்) வந்திருப்பதும் இப் புணர்நிலையணிக்கு உதாரணமாம். புலர்ந்தது என்னும் வினையிலே, நேரான அர்த்தத்தில் அன்றிரவும், அதைப்போலத் தமயந்தி பட்டிருந்த துயரமும் பொருந்த முடிகின்றன. இரவும் அவள் துயரும் ஒன்ருக விடிவதுபோல் இரண்டு செய்கைகள் ஒன்ருக நிகழ்வதால் இப் புணர்நிலையணிக்கு உடன் நிகழ்ச்சி அணி என்னும் பெயரும் உண்டு. இதனை வடமொழியில் ஸஹோக்தி என்பவர்.

நைடதத்தில், நளனுக்குத் தமயந்தி மாலைசூட்டியதற்குப் பொறுக்காமல் மற்ற அரசர்களெல்லாரும் அவனேடு போர்புரிய வந்தனர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தப் போரிலே நளனுடைய நிலையை வருணிக்கின்ற அதிவீரராம பாண்டியன், "வள்ளல் தன்புருவத்தோடு வரிசிலைகுனிந்ததன்றே" என்றுகூறியதிலும் புணர்நிலையணி அமைந்திருக்கக் காணலாம். கோபத்தால் வளைந்த அவன் புருவத்திற்கு நிகராகக் கையிலிருந்த வில்லும் சரமெய்ய வளைந்தது என்பது அதன் பொருள். வில்லும் புருவமும் வளைகின்றதாகிய அத்தொழில் உடன்நிகழ்வதால் இது உடன் நிகழ்ச்சி அல்லது புணர்நிலை அல்லது ஸஹோக்தி என்று சொல்லப்படும் அணி ஆகும்.

புணர்நிலையணி இருவிதம். ஒன்று வினைப் புணர்நிலை, மற்றது பண்புப் புணர்நிலை. இவைகளின் பேர்களே குறிக்கின்றபடி, வேறு வேருகிய இரண்டினை ஓரே வினையினல் புணர்த்திப் பொருந்தக் கூறுவது வினைப்புணர்நிலை யணி ஆகும். "கோதையாள் ஆழ்துயரத்தோடு அற்றைப்பொழுது விடிந்தது," என்னுங்கால் விடிதலென்னும் தொழிலைச் செய்வதாகிய வினையிலே துயரமும் பொழுதும் சேர்ந்து நிகழ்வதால் இது வினைப்புணர்நிலையணி என்பது தெரியவரும். அவ்வாறே, நைடதத்திலிருந்து காட்டிய உதாரணத்தில் நளன் வில்லும் புருவமும், வளைவதாகிய வினையைப்பற்றிச் சேர்ந்து நிகழ்கின்றன வாதலால், அதுவும் வினைப்புணர்நிலையே. கார்காலத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் பிரிந்துபோன நாயகன், கார் வந்தும் அவன் வரத் தாழ்வதற்கு ஆற்ருத மனைவியின் வருத்தத்தைத் தெரிவிக்குங்கால், "மழை முகிலொடு அவள் கண்களும் நீர் பொழிந்தன" என்பதும் இப் வினைப் புணர்நிலை யணியாகும்.

இருவேறு பொருள்கள் ஓரே தொழிலில் பொருந்தி நிகழுமாயின் வினைப் புணர்நிலையணி ஆவது கண்டோம். அவ்விதமே, இரு வேறு பொருள்கள் ஓரே குணம் அல்லது பண்பினல்பொருந்தக் கூறப்பெற்ருல்

பண்புப் புணர்நிலையணி தோன்றும். இந்தச் செய்யுளில் "துகிலும் உயிரும் இரண்டு ஆக அரிந்தான்" என்பதில், துகில் உயிர் என்னும் இவ்விரு பொருள்களும் இரண்டு ஆதுந் தன்மையில் சேர்ந்து பொருந்தின. ஆதலால் இதனை வினைப் புணர்நிலையணி என்பதைப் பார்க்கிலும் பண்புப் புணர்நிலையணி என்பதே ஏற்றதாகும். "மாலைக்காலமும் மடவாள் உயிரும்வெம்மையவாய் நீண்டன," என்பதும் பண்புப் புணர்நிலையணிக்கு உதாரணம். வெம்மை நீட்சி என்பன வினைகளல்ல; இவைகுணங்களாகும். இக்குணங்களை உடைமையால் மாலையும் உயிரும் ஒரு தன்மையிற் பொருந்தின. ஆகையால் பண்புப் புணர்நிலை ஆயிற்று. நீண்டன என்று இங்கும், அரிந்தான் என்று முன் உதாரணத்திலும்வந்திருப்பவை,வினைச்சொற்களாயிருந்தாலும், அவைகளில் அடங்கியுள்ள தொழிலின் ஒற்றுமையால் அவ்விரு பொருள்களும் பொருந்தவில்லை என்பது ஊன்றிப்பார்த்தால் தெரியவரும். ஆகையால் அவை வினைப்புணர்நிலை அணிகள் ஆகா. இச்செய்யுளில் இரண்டு என்னும் பண்பினும் பின் உதாரணத்தில் வெம்மை நீட்சி என்னுங் குணங்களினுலுமே பொருத்தம் ஏற்படுகின்ற நுட்பத்தை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[791-வது பக்கத் தொடர்ச்சி]

3. சம்சயம் (Doubt).

ஒரு தருமியின் மாறுபட்ட பல பொருள்ஞானம் சம்சயம் எனப்படும். அதனையே ஐயம் என்று பகர்வார். சமான தருமத்தையுடைய தர்மி, ஞானத்தாலும் விசேட தரிசனமின்மையாலும் இருதரும ஸ்மரணத்தாலும் ஒன்றை இதுவோ அதுவோ என்று சந்தேகிப்பது சம்சயமாம்.

அநுச யப்பட் டதுவிது வென்னுதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே.

திருப்பூவணூர் - திருக்குறுந்தொகை 6.

சம்சயத்தாலே மனத்தில் நெளிவுண்டாகி அது நேராய்நிற்குந்தன்மையை யிழக்குமென்பர் மேலோர்:—

நேளிவுண்டாக் கருதாதே நிமலன் றன்னை
நினைமின்கள் நித்தலும்நே ரிழையா ளாய
ஒளிவண்டார் கருங்குழலி யுமையாள் தன்னை
யொருபாகத் தமர்ந்தடியா ருள்கி யேத்தக்
களிவண்டார் கரும்பொழில்சூழ் கண்டல் வேலிக்
கழிப்பாலை மேய கபா லப்பனூர்
வளியுண்டார் மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே

திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம் 3.

இது கயிறோ பாம்போ என்று தோன்றும் ஞானம் சம்சயமாம். தருமியின் நிச்சய ஞானம் அதற்கு விரோதியாம். இது, கிளிஞ்சலோ அல்லது வெள்ளியோ என்று நிலவில் சந்தேகமுண்டாகுமிடத்து 'இது' என்பது ஒரு தருமியும், கிளஞ்சலோ வெள்ளியோ வென்பது பல தருமங்களுமாம். அவை மாறுபட்ட தருமங்களாகையால், அவற்றின் ஞானம் ஏககாலத்தில் நிற்பின் அது சமுசயமாகும். அதுவே ஆராய்ச்சிக்கு இடங்கொடுக்கும்; ஆகையால் அது தத்துவ விசாரணைக்குச் சிறப்பாயதோர் அறிகுறியாகும். இதற்கு உதாரணமாக அப்பர், அரனை மிகக் கேவலமாய்ப் புறச்சமயவாதிகள் இகழ்கின்ற சொற்கள் அவனுக்குப் பொருந்துமாவென்று, ஆராய்கின்றதை, அடியில் வரும் பாசுரங்களால் விளங்கும்:—

இகழுமா றெங்ஙனே ஏழை நெஞ்சே
யிகழாது பார்தொன்றாய் நின்றான் றன்னை
நகழமால் வரைக்கீழிட் டரக்கர் கோனை
நலனழித்து நன்கருளிச் செய்தான் றன்னைத்
திகழுமா மதகரியி னுரிபோர்த் தானைத்
திருப்புன்கூர் மேவிய சிவலோ கனை
நிகழுமா வல்லானை நீடூ ரானை
நீதனே னென்னேநான் நினையா வாறே.

திருப்புன்கூரும் திருநீடூரும் திருத்தாண்டகம் 11.

மனைதுறந்த வல்லமணர் தங்கள் பொய்யும்
மாண்புரைக்கும் மனக்குண்டர் தங்கள் பொய்யும்
சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்
மெய்யென்று கருதாதே போத நெஞ்சே !
பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த வெந்தை
யவன்பற்றே பற்றாகக் காணின் அல்லால்
கனைகடலின் தென்கழி சூழ்ந்த நாகைக்
காரோணத் தென்ஞான்றுங் காண லாமே.

திருநாகைக்காரோணம் - திருத்தாண்டகம் 10.

சம்சயம் மூன்றுவகை. அவையாவன. (1) சாதாரண தர்மஞானத்தாற் றோன்றுவது (2) அசாதாரண தர்மஞானத்தாற்றோன்றுவது (3) விப்பிரதிபத்தி வாக்கிய ஞானத்தாற்றோன்றுவது, என்பனவாம். அவற்றுள்—

(1) சாதாரண தரும தரிசனத்தாற் றோன்றுவது, * விசேடணம் காணுதிருப்பதால், கட்டையோ கள்வனோ என்பது, இரவில் மனிதனுக்கும் கட்டைக்கும் உள்ள பேதமான உருவ விசேடணம்காணுமை இந்தச் சம்சயத்திற்குக் காரணமாம். இச்சம்சயத்தை அப்பர் உருவகத்திலும் இயற்கையிலும் முறையே பின்வரும் பாசுரங்களில் குறிப்பது காண்க:—

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே.

திருவதிகை வீரட்டானம்-பண்-காந்தார பஞ்சமம் 8.

ஏறி னுரிமை யோர்கள் பணிகண்டு
தேறு வாரலர் தீவினை யாளர்கள்

---

* உடையர் கோவண மொன்றுங் குறைவிலார்
படைகொள் பாரிடஞ் சூழ்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை யவலமே.

திருப்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை 1.

பாறி னார்பணி வேண்டும் பழனத்தான்
கூறி னானுமை யாளொடுங் கூடவே.
திருப்பழனம் - திருக்குறுந்தொகை 8.

(2) அசாதாரண தருமதரிசனத்தாற் றோன்றுவது—ஒன்றன் இலக்கணத்தை அசாதாரணதருமம் என்பர். சிவத்தின் இலக்கணம் அன்பின் வடிவம். அது கண்டறியாத நிலையே உய்வதற்கு இடையூறாய் நிற்கின்ற ஞானத்தடையாகும்.

அன்ப னையடி யாரிடர் நீக்கியைச்
செம்பொ னைத்திக ழுந்திருக் கச்சியே
கம்ப னைக்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
நம்ப னைக்கண்டு நானுய்யப் பெற்றேனே.
திருக்கடுவாய்க்கரைத் திருப்புத்தூர்-திருக்குறுந்தொகை 3.

(3) தருமியின் விசேடங் காணாதிருக்கையில் விவாதத்தால் தோன்றுவது. இது விப்பிரதி வாக்கியம், அல்லது விருத்தாந்தத்தைக் கூறும் வாக்கியத்தாலுண்டாவது. இது கட்சிப் பிரதிகட்சியால் ஏற்படும் கலக்கத்தின் சம்பந்தமாகும்.

ஓதியே கழிக்கின் றீர்கள் உலகத்தீர் ஒருவன் றன்னை
நீதியால் நினைய மாட்டீர் நின்மல னென்று சொல்லீர்
சாதியா நான்முகனுஞ் சக்கரத் தானுங் காணாச் [ரே.
சோதியாய்ச் சுடர தானார் திருச்சோற்றுத் துறையனா
திருச்சோற்றுத்துறை - திருநேரிசை 9.

ஒருசப்தம் நித்தியமோ அநித்தியமோ வெனவினவ, ஒருவன் நித்தியமென்றும் மற்றொருவன் அநித்தியமென்றுங் கூறினால், அவரது விவாதத்தால் விசேடங் காணாத நடுவிலிருந்த ஒருவருக்கு இச்சொல் (சப்தம்) நித்தியமோ அல்லது அநித்தியமோ வென்று சம்சயமுண்டாகும்.

நம்பு வீரிது கேண்மின்கள் நாடொறும்
எம்பி ரானென் றிமையவ ரேத்துமே
கம்ப னாருறை கின்ற கருவிரிக்
கொம்ப னார்பயில் கொட்டிட்டை சேர்மினே.
திருக்கருவிலிக் கொட்டிட்டை - திருக்குறுந்தொகை 9.

4. பிரயோசனம் (Purpose)

எதனால் ஏவப்பட்டு ஒருவன் ஒரு காரியத்தில் முயல்கின்றானென்பதே தர்க்க ஆராய்ச்சியில் இன்றியமையாத தன்மையாகும். வாளா விருப்பவனாகிய மௌனியும் அத்தன்மையின் பிரயோசனம் விரும்பியே அம்மௌன சாதனத்தி லழுந்துகின்றா னன்றோ? எனவே பிரயோசனம் அல்லது பயன்முயற்சியின் உத்தேசத்திற்கு அடிப்படையாகும்.

வரும்பயனை யெழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
அம்மானை யலைகடல்நஞ் சயின்றான் றன்னைச்
சுரும்பமருங் குழன்மடவார் கடைக்கண் ணோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.
கோயில் - பெரிய திருத்தாண்டகம் 7.

பிரயோசனம் இருவகை. அவை, முக்கியம் கௌணம் என்பன. சுகமடைதலும் துக்கக் கேடும் முக்கியப் பிரயோசன மெனப்படும். அவற்றிற்குச் சாதனமாயுள்ள ஏனைய பிரயோஜனம் கௌணப் பிரயோஜனமெனப்படும். இவற்றுள் கௌணப் பிரயோசனமே திருஷ்டம் (அல்லது பிரத்தியட்சம்)பிரயோசனமாம். முக்கியப் பிரயோசனம் பிரத்தியட்சத்தில் காணப்படாது நிற்பது. அதை அத்திருஷ்டப் பிரயோசனமென்பர் தர்க்கநூலார்.

(உ-ம் பாவநாசத் திருக்குறுந்தொகை)

மற்று நற்றவஞ் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே.
பாவநாசத் திருக்குறுந்தொகை 10.

குடி வாழ்க்கை

[Plato's Republic]

[796-வது பக்கத் தொடர்ச்சி]

எனவே அரசாங்கத்தை நடத்துபவன் மேற்கூறிய இரண்டு தன்மைகளை யுடையவனாகவேண்டும். எனின் யார் அந்த வேலைக்குரியவன் என்பது அடுத்த கேள்வியாகின்றது. அக்குணத்தைக் காட்டுவதற்கு, நான் முன் உதாரணமாய்க் கூப்பிட்ட நாய் விடைதர உதவும். நாய்கள் அறிந்தவர்களிடம் அன்பு காட்டும்; வேற்று மனிதனைக் கண்டாற் சீறும். பழகினவர், பழகாத புதுமனிதர் என்ற விதியினால் நடத்தை முறையைத் தேர்ந்துகொள்ளும் நாய் ஒரு தத்துவ சாஸ்திரி போலும். நாயாகட்டும், மனிதனாகட்டும், தத்துவ அறிவு யாரிடத்தில் இருக்கின்றதோ அவன் மிருதுவான தன்மையை யுடையவனாகின்றான். எனவே, ஜனங்களைக் காப்பாற்றும் வேலையில் அமர்கின்றவன் தத்துவ அறிவு படைத்தவனாகவோ, அல்லது கல்வியின்பால் ஆர்வம் உடையவனாகவோ இருக்கவேண்டும். கல்விப் பயிற்சிதான் மிருதுவான தன்மையைத் தரும். இனி, நாட்டினை ஆள்கின்றவர்களுக்கு எத்தகைய கல்வி யளிக்கப்படவேண்டும் என்பதைப்பார்க்கப் புகுவோம். சங்கீதம் உடற்பயிற்சி என்ற பண்டைமுறை போதுமா? சங்கீதம் என்பதில் இலக்கியமும் அடங்கும். இலக்கியம் உண்மையான இலக்கியம் என்றும், பொய்களைக் கொண்ட இலக்கியமென்றும் இருவகைப்படும்.

சிறுபொழுதில் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்ற, பொய்யும் சிறுசெயல்களும் நிறைந்த கதைகள் தீமையை விளைக்கும் தன்மையன. மேலுலகில் கடவுளர்கள் இடுகின்ற பூசல்களும், தகப்பனை வருத்தும் மைந்தனது சரிதையும் தாயினைப்பற்றி வருத்தும் செயல்களும் நிறைந்த கதைகளைச் சிறுவயதில் ஓதுவிப்பதால் சிறுவர்கள் நன்கு வளர்ச்சியுறமாட்டார்கள். இவைகளில் தத்துவார்த்தம் சில இருக்கலாம் எனினும், சிறுவயதினர் அக்கதைகளின் உள்ளுறை பொருளை அறிய இயலாதவர்களானபடியினால், கதையின்நிகழ்ச்சியே அவரிடம் எஞ்சி நிற்கும். எனின், எத்தகைய நூல்களைப் பாடமாக வைக்கவேண்டுமென்று என்னைக் கேட்கலாம். புத்தகம் செய்பவன் நானல்லன். என்ன

என்ன முறையினதாக நூல்கள் ஆக்கப்படவேண்டுமென்று குறிக்கலாமேயல்லாமல் என்னால் புத்தகமே ஆக்கித்தர முடியாது.

இனிவரையப்படும் புத்தகங்களில்,கடவுளர்எப்படி இருக்கின்றனரோ அப்படியே அவர்களுக்கு இடம்தரவேண்டும். கடவுளே உலகத்தில் காணப்படும் நன்மை தீமையெல்லாவற்றிற்கும்முதல்வர் என்றுகூறலாகாது. அவர் நன்மையின் முதல்வர். கிரேக்கியக் கவிவாணர்கள் கூறியுள்ளதுபோல் அவர் நன்மை தீமை இரண்டிற்கும் காரணர் என்றும், அவர் தனித்தனி இரண்டு குடம்நிறைய நல்வினைத்தீவினைகளைத் தம்பக்கலில்வைத்துக்கொண்டிருக்கின்றார் என்றும் சொல்லிக் கடவுளின் பெருமைமையை இழித்துவிடலாகாது. தம்முள் ஒருவரோடொருவர்சண்டையிட்டுக்கொள்ளுமாறும், கிரேக்கர்கள் பக்கத்தில் சேர்ந்துகொண்டு டிரோஜன் நாட்டாரை முறியடிக்க உதவுமாறும் கடவுளர்களைக் கற்பிக்கும் கதைகள்யாவும் மிகக்கேடுவிளைவிப்பனவேயாகும். இது தவறு. கடவுள் நன்மையின் தலைவர், அவரது அத்தன்மை கெடாதபடி காக்கவேண்டும். நூல்கள் எழுதுவதில் முதன்முதலாகக் கவனிக்கப்படவேண்டியது இது.

இரண்டாவதாக, உருவமாறுதல் ஒன்றும் கடவுளுக்குத் தரலாகாது. சிறிது சிந்தித்தால் இந்தமாற்றம் பொருத்தமற்றதென்பது நன்குபுலனாகும். கதைகளில் கடவுளர் உருவம் மாறிக்காணும் இது நம்முடைய கற்பனையோ அல்லது அவர்களுடைய செய்கையோ என்பதை எளிதிலறியலாம். இயற்கையும் மனிதனுடைய சிறந்த குணங்களும் வெளியிருக்கும் ஒன்றினால் மாற்றப்படும் தன்மையனவல்ல. எனவே அவைகளை ஒருவன் மாற்றிவைக்க முடியாது. தானாகக்கடவுள் தன்னை மாற்றிக்கொள்ளலாகாதோ வென்றால், இருப்பதைக் காட்டிலும் சிறப்படையும்படி தம்மை யவர் மாற்றிக்கொள்ள முடியாது. தன்னை யவர் இழித்துக்கொள்ளவே மாற்றிக்கொள்ள வேண்டும். அவர் அழகுடனும் சிறப்புடனுமே இருக்கின்றார். எனவே அவர் இருக்கின்றபடி யிருந்தாற்போதும்.

கடவுள் உருமாறி இரவில் வருவதும், பிச்சையெடுப்பதும் போன்ற கதைகள் கூடவே கூடாது. கடவுள் முழுதும்உண்மை; அவர் மாறுவதில்லை. பொய்வேடம் புனைந்து ஒருவரையும் வஞ்சிக்கமாட்டார். கடவுள் சத்தியமானதால் பொய்க் கூற்றும் புனைவேடமும், அவரது சத்தியத்தன்மையைக் குலைத்துவிடும்.

ஜனங்களுக்கு மதத்தினிடமும் கடவுளினிடமும் குறையாத பற்றுவேண்டும். ஆயினும் பயத்தினால் பற்றப்படும் மதம் விரும்புவதற்குரியதன்று.எனவே பயம் என்பது மாந்தர் மனத்தைவிட்டகன்று மதம்பரிசுத்தமடையவேண்டும். சாவுக்கு அஞ்சுபவன் தைரியசாலியாயிருக்கமுடியுமா? நரகத்தைக் காட்டிப் பயமுறுத்தும் கதைகள் எல்லாம் பொய்யாகவேண்டும். சத்தியம் முதலிடம் பெறவேண்டும். பொய்யும் வஞ்சனையும்ஒரு வேளை சிறுமானுடர்க்கு மருந்துபோல் உபயோகமாகலாம். கடவுளுக்குப் பொய்யின் உதவி அவசியமில்லை. எனவே சிறுவர்கள் சத்தியத்தில் வளருமாறு கல்வி அமையவேண்டும். சிறுவர்களுக்குத் தன்னடக்கமும், கீழ்ப்படிதலும் போதிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் மிருதுத் தன்மையும் மிதமும் அவர்களிடம் உண்டாகும். சங்கீதமும், சிற்பக்கலைப் பழக்கங்களும் சிறிது உடற்பயிற்சியும்வேண்டும். இன்னபடி சிறுவர்கள் பயிற்றப்படவேண்டும்.

இனி ஆள்வதற்கு உரியவர் யார்என்று பார்ப்போம். வயது முதிர்ந்தவர்களே ஆள்வதற்குரியவர். பெரியவர்கள் சிறுவர்களை ஆளவேண்டும். வயதினால் முதிர்ந்த நல்லோரே நமது சிறந்த காப்பாளர்களாவார்கள். தன் கீழுள்ள குடிமக்களை நன்கு நேசிப்பவர்களும், தன்னையேபோல் மன்னுயிரை நோக்குகின்றவர்களும் சிறந்த நல்லோராவார். இத்தகைய பெரியவர்களை நாம் தேடியெடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இருக்கவேண்டிய முறையில் இருந்துவருகின்றார்களா என்றும் நாம் அவர்களைக் கவனித்துவரவேண்டும். ஏனெனில் காலம் சிறிது மனத்தை மாற்றிவைக்கலாம். சுகாதிவைபவங்கள் மனிதனைக் கவரலாம். வந்தடையும் துன்பங்களாலும் துக்கங்களாலும் மனிதன் நிலைபிறழலாம். எனவே நமது காப்பாளர்கள் நெருப்பின் சோதனைக்குள்ளானதங்கத்தைப்போன்றவர்களாயிருத்தல்வேண்டும். வாழ்க்கையின் சோதனைகளில் பட்டு, ஒன்றாலும் தம்நிலை தளராமல் வெற்றிபெற்றவர்களாயிருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் நலத்தையல்லாமல் வேறொன்றிலும் பற்றுதல்இல்லாதவர்களா யிருப்பார்கள். இருக்கையிலும் இறந்த பின்னரும் அவரே பெரிய மரியாதைக்கு உரியராவர். இவ்வகுப்பினரே காப்பாளர்களாவர். மற்றவர்கள் காப்பாளர்களுக்குத் துணைக்கருவியே யாவார்.

மக்களெல்லோரும்இப்பூமியின்குழந்தைகள்.பிள்ளைகளின் கடமை பெற்றஅன்னையைப்போற்றிக்காத்தல். மேலும்அவர்தாம் ஒருவருக்கொருவர் சகோதரராவர். இப்பூவுலகின்கண் மக்களாய்ப் பிறந்தசோதரர்கள்ஒரு விதமான இயற்கையை யுடையவர்களாய் இருக்கவேண்டு மென்பதில்லை. தங்கத்தின் தன்மை யுடையவர்களாய்ச் சிலரைக் கடவுள்ஆக்கியுள்ளார். அவர்கள்ஆள்வதற்கு உரியவர். வெள்ளியின் தன்மையுடைய வேறு சிலர் ஆள்கின்றவர்களுக்குத் துணையாக வேண்டியவர்கள். இவ்விரு தன்மையினர் போக, மற்றவர் பித்தளை யியற்கையும் இரும்பு இயற்கையும் உடையவராவர். உழுது பயிரிடுதலும், மற்றக் கைத்தொழில்களைச் செய்வதும் அவர்களது வேலையாகும். இதை மக்கள் மறத்தலாகாது. ஆனால் ஒன்று; தங்கத் தன்மையருக்குத் தங்கத் தன்மையுடைய குழந்தையே பிறக்கவேண்டு மென்பதில்லை. வெள்ளித் தன்மையுடைய பிள்ளையும் பிறக்கலாம். வெள்ளித் தன்மையுடைய தாய்தந்தையர்க்குத் தங்கத்தன்மையுடைய குழந்தையும் பிறக்கலாம். இவ்விதம் மாறுதல் ஏற்படும். உழுது பயிரிடுபவனுக்குத் தங்கத்தன்மையுடையபிள்ளை பிறந்தால் அப்பிள்ளை மேலே போகவேண்டியதுதான். தங்கத் தன்மை யுடையோருக்குப் பிறந்துள இரும்புத் தன்மையுடைய பிள்ளை கீழிறங்க வேண்டியதே. இல்லையேல் அரசாங்கமும்குடிவாழ்க்கையும்கேடெய்தும். இதை மக்கள்ஏற்பார்களா? இக்காலத்தவர் ஏற்காமற் போயினும் வருகின்றசந்ததியார் ஏற்றேதீரவேண்டும்.

நமதுநாட்டு மக்கள் சுகாதிவைபவங்களைத்துறந்து, ஒரு வேலையாளைப்போல் இருக்க வேண்டுமா? சொத்து முதலிய சுதந்திரம் அவர்களுக்கு இருக்கலாகாதா? அவர்கள் சந்தோஷமற்றவர்களாக இருக்கவேண்டுமா? என்னின், நமது நோக்கம் அவர்களைச் சந்தோஷமாயி

ருக்கச்செய்வது மன்று, சந்தோஷம் அற்றவர்களாகச் செய்வதுமன்று. நாடு என்கின்ற முழுமையின் நன்மையே நமது நோக்கம். முழுமையின் ஒருபாகம் எப்படியிருக்கின்றது என்று கருதுவது கடனன்று. ஒரு சிற்பியினிடம் சென்று "உருவத்தின் சிறந்த அங்கமான கண்ணை ஏன் கருப்பு நிறமுள்ளதாகச்செய்தாய், சிவப்புநிறம் கண்ணுக்குத் தந்திருக்கலாகாதா" என்று நான் கேட்டால், 'கண் கண்ணாகத்தான் இருப்பது தகுதி; நீ முழு உருவத்தையும் நோக்கவேண்டும்' என்றல்லவா கூறுவான்.

முட்டாளின் சுவர்க்கத்தைப் (Fools' Paradise) பற்றி நான் நினைத்துக்கொள்ளமுடியும். ஒவ்வொருவரும் குடித்து மகிழ்ந்தும் உடுத்து மகிழ்ந்தும் வாழலாம். குயவன் நாற்காலியில் படுத்துக்கொண்டு களிக்கலாம். தோல் வினைஞன் தன் வேலைக்கு ஓய்வுகொடுத்துவிடலாம். இப்படி மக்கள் தங்கள் தன்மைக்குரிய வேலைகளை விட்டுவிட்டு மகிழலாம். ஒரு சமூகம் ஒரு வேளை சக்கிலித் தன்மையினன் இல்லாமலும் நடைபெறலாம். ஆனால் ஆள்பவர் இழிந்தால் நாடு கெட்டுவிடும். பின்னர், குழப்பமே எஞ்சும். தனி மனிதன் ஓய்வு எடுத்துக் கொள்வதில் கெடுதி ஒன்றுமில்லை. ஆனால் எல்லாத் தன்மையரின் தன்மைக்குரிய கருமத்தால் கட்டப்பெற்ற சமூகவாழ்க்கை செழித்துவளராது. அவ்வாழ்க்கையின் அங்கங்களான ஒவ்வொரு இனத்தாரும் அவரவர்களது கருமத்தைச் செய்தே தீரவேண்டும். சந்தோஷம் என்பது ஒருவரை ஒரு வகுப்பாரைப் பற்றியதன்று. ஒரு சமூகத்தின் சந்தோஷந்தான் அச்சமூகத்தின் அஸ்திவாரமான எல்லோருடைய சந்தோஷமுமாகும்.

மத்திய வகுப்பினர்களை எடுத்துக்கொள்வோம். கருமானாய் இருப்பவனுக்கு அவன் வேலைக்குரிய கருவிகளை வாங்குவதற்கு வேண்டிய பணந்தான் தேவை. முதல்வைத்துத்தனியான வியாபாரம் செய்ய அவனுக்குப் பணம் இருத்தல் கூடாது. நமது ஜனங்கள் ஏழையாயிருந்தால் அற்பகுணம் படைத்தவர்களாயிருப்பார்கள். செல்வம் படைப்பின் சோம்பேறிகளாவார்கள். எனவே இருவழியிலும் திருப்தி யென்பது அவர்களுக்கு இராது. திருப்தியில்லாத மக்கள் ஒரு சமூகத்தில் இருப்பின் நமது அரசாங்கம் பகைவர் நாட்டின் மேல் படையெடுக்க இயலுமா? (தொடரும்)

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[784-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து, 10-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

சன்மம் பலபல செய்து
வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம்வில்
லொண்மை யுடைய வுலக்கையொள்வா
ண்டுகொண்டு புள்ளூர்ந் துலகில்
வன்மை யுடைய வரக்க
ரசுரரை மாளப் படைபொருத
நன்மை யுடையவன் சீர்பரவப்
பெற்ற நானோர் குறைவிலனே.

அவதாரிகை:—சென்ற தசகத்தில், எம்பெருமான் ஒருவனே யாவராலும் கவிபாடுகைக்கு உரியவனென்றும் மற்றொரு தெய்வமோ அல்லது மானிடமோ அத்தகுதி வாய்ந்தவர் இல்லை என்றும் மற்றப்புலவர்க்குக் கற்பித்து, அன்னவர்களை எம்பெருமானுக்கே கவிபாடுகைக்குவாருங்கோளென்று ஆழ்வார் அழைத்து, பிறகு தம் பிருகிருதி எம்பெருமானைத் தவிர மற்றவரைக் கவிபாடுகைக்கு ஈடற்றது என்று சந்தோஷமடைந்தார். இந்தச் சந்தோஷத்தைத் தொடர்ந்தே இந்தத் தசகத்திலும், இவ்வண்ணம் தாம் பெற்ற பெரும்பேற்றைப் பலவாறாக அநுபவித்துக் களிப்படைகிறார்.

பொழிப்புரை:-அளவிடக்கூடாத அவதாரங்களைச் செய்து எல்லா மனுஷியர்களுக்கும் புலப்படும்படி சங்கு, சக்கரம், சாரங்கம் என்ற வில், உலக்கைபோன்ற முஸலம் என்கிறபடை, கத்தி, கதை முதலான ஆயுதங்களைத்தரித்துக்கொண்டுகருடவாஹனத்தின்மேலேறி இந்த உலகில் பலசாலிகளான அசுரரென்ன ராக்ஷஸர்களென்ன இவர்களின் சேனை முழுவதும் நசிக்கும்படி உலகங்களைக்காத்து அளிக்கும்பொருட்டுப் போர் பொருத கல்யாணமானகுணத்தை வாழ்த்தும் பாக்கியம் பெற்ற எனக்கு இனி என்ன குறை உண்டு? ஒன்றும் இல்லை.

2-ம் பாசுரம்.

குறைவிற் றடங்கடற் கோளர
வேறித்தன் கோலச்செந் தாமரைக்கண்
ணுறைபவன் போலவோர் யோகுபுணர்ந்த
வொளிமணி வண்ணன் கண்ணன்
கறையணி மூக்குடைப் புள்ளைக்
கடாவி யசுரரைக் காய்ந்தவம்மா
னிறைபுக ழேத்தியும் பாடியு
மாடியும் யானொரு முட்டிலனே.

அவதாரிகை:—முன்பாட்டில் சொன்னதையே பிரகார பேதமாய் இப்பாசுரம் கூறுகின்றது.

பதக்குறிப்புக்கள்:—குறைவில் தடங்கடல்-பகவான் சேஷசாயியாய்ப் பாற்கடலில் பள்ளிகொண்டது பாற்கடலுக்கு மனக்குறைவில்லை. அதாவது, அவன் பள்ளிகொண்டதால் அதற்கு ஏற்றமே ஸம்பவித்தது. கோள் அரவு-வலிமையுடையசர்ப்பம். கண்உறைபவன்போல்-தூங்கவில்லை, தூங்குவதுபோல் கண்மூடிப் பகவான் கிடப்பது யோகநித்திரை செய்து உலகங்களை ரக்ஷிப்பதின்பொருட்டு என்று தாத்பரியம். கறையணி-கருடபகவான் மூக்கு, உடலின் சுவர்ணச்சாயைக்கும் கழுத்தின் முத்துச் சாயைக்கும் வேறாக அழகான ஆபரணம்போல் விளங்கிற்று என்று வர்ணிக்கிறார். யான் முட்டிலனே-தோத்திரங்களைப் பாடுவதில் யாதொரு தடையுமின்றி அநுபவித்தேன் என்கிறார்.

குறிப்பு:-அசுரர்களையும் ராக்ஷஸர்களையும் கருடபகவான் மீதேறி ஸம்ஹாரம் செய்த கதையை ஹரிவம்சத்தில் கண்டுகொள்க.

உரை:—தன்னுள்ளே வந்து பள்ளிகொண்டதால் தன் இஷ்டப் பிராப்தியே யடைந்த தடங்கடலிலே, பணவிசேஷங்களுடன் ஆயிரம்முகத்தால் பிரகாசிக்கும் ஆதிசேஷன்மீது ஏறியருளி அவனது ஸ்பர்சத்தால் சுகாநுபவம் செய்துகொண்டு ஆச்ரிதரை இரக்ஷிக்கும்பொருட்டு வஸுதேவர் வீட்டில் பிறந்து அவதரித்துஸர்வ கல்யாணகுணங்களால் பூரணராயிருந்து கருடனைக்கடாவி அசுரரைக்காய்ந்த என் அம்மான் நிறை புகழ்களை யாதொரு தங்கு தடையும் இன்றி ஏத்தியும் பாடியும் ஆடியும் அநுபவிக்கப் பெற்றேன்.

3-ம் பாசுரம்.

முட்டில் பலபோகத் தொருதனி
நாயகன் மூவுல குக்குரிய
கட்டியைத் தேனை யமுதை
நன்பாலைக் கனியைக் கரும்புதன்னை
மட்டவிழ் தண்ணந் துழாய்முடி
யானை வணங்கி யவன்திறத்துப்
பட்ட பின்னை யிறையாகிலும்
யானென் மனத்துப் பரிவிலனே.

பதக்குறிப்புக்கள்:— இறையாகிலும்-கொஞ்சமானாலும்; பரிவு - துக்கம்; இலன் - இல்லாதவன்; அவன் திறத்துப் பட்டபின்னை-பகவானது விஷயத்தில் என் மனதிற்கு உணர்ச்சியுண்டானபின், முட்டில் - தடுக்க வல்ல ஹேதுக்கள் இல்லாத, அதாவது, நித்தியமான.

பொழிப்புரை:—நித்தியாவஸித்த ஸர்வவிதபோகங்களையுடையவனாய் மற்றவர்களால் உயர்வு ஒப்பு இல்லாதவனாய் மனுஷியனைப்போன்று ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்து ஸர்வலோகத்திற்கும் பொதுவாய் எல்லாராலும் சந்தோஷமாய் அநுபவிக்கக்கூடிய எம்பெருமானை என்மனதில் பிரியப்பட்டு நான் அநுபவித்த பிறகு என்க்குச் சிறிதும் துக்கமில்லை என்கிறார்.

4-ம் பாசுரம்.

பரிவின்றி வாணனைக் காத்துமென்
றன்று படையோடும் வந்தெதிர்ந்த
திரிபுரம் செற்றவனும் மகனும்
பின்னு மங்கியும் போர்தொலையப்
பொருசிறைப் புள்ளை கடாவிய
மாயனை யாயனைப் பொற்சக்கரத்
தரியனை யச்சுதனைப் பற்றி
யானிறை யேனு மிடரிலனே.

பதக்குறிப்புக்கள்:—பரிவின்றிக் காத்தும் கேடில்லாமல் ரக்ஷித்தும் காப்போமென்று.அங்கி-அக்கினி என்ற வடமொழியின் திரிபு - அக்நிபகவான் வாணாசுரனுக்குத்துணையாகப் போரில்உதவியதைக்குறிக்கிறார்.போர் தொலைய - போரில் அடிபட்டுப்போக, பொருசிறை - யுத்தத்தில் உத்ஸாகமாய்ச்சிறகுகளைவிரித்துக்கொண்டு துருக்கனைத் தொலைக்கும்சிறகுகள், அரியனை - அபூர்வ சக்தி யுள்ளவனை - "ஹரி" என்கிற பதத்தின் திரிபு என்று கொள்ளலாகாது. பற்றி-கவிபாட ஏற்படுத்திக் கொண்ட பின்னர்; இறையேனும்-கொஞ்சமாகிலும். இடரிலன், துக்கமில்லாதவன் ஆனேன்.

பொழிப்புரை:—"தன் ஆச்ரிதனான வாணாசுரனுக்கு ஒரு அரிஷ்டமும் வரக்கூடாதென்று,திரிபுரம் எரித்த ருத்திரபகவான் பிரதிஞ்ஞைகள் பண்ணிக்கொண்டு தன் சேனையையும், அந்தத் திரிபுர யுத்தத்தில் சௌரியத்தில் பேர்பெற்ற கீர்த்தியுடன்கூடிய தன்குமாரனான மகனையும், அக்கினியையும் அழைத்து வந்து போராடிநிற்கவும், அவர் தோற்கும்படி யுத்தாவேசம் ஏறிய கருடனை வாகனமாகக்கொண்ட மஹா ஆச்சரிய பூதனான எம்பெருமான் வாணாசுரன். தோள்கள் ஆயிரத்தையும் துணித்தருளுகைக்காகத் திருவாழியைச் சுழற்றியருளியபோது அத்திருவாழியும் கையும் சேர்த்தியாயிருந்த அழகாலே ஸகலஜன மனோஹரியாய் ஆச்ரிதஜநங்களோடு பரிமாறுகையில் ஸாஹஸ சுபாவனாயிருந்தும் ஸௌசீல்ய மூர்த்தியாயிருக்கும் எம்பெருமானைக் கவிபாட ஆரம்பித்தபின்னர் எள்ளளவேனும் துக்கமில்தாவனானேன்."

5-ம் பாசுரம்.

இடரின்றி யொருநா ளொருபோழ்தி
லெல்லா வுலகுங் கழியப்
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனு
முடனேறத் திண்டேர் கடவிச்
சுடரொளியாய் நின்ற தன்னுடைச்
சோதியில் வைதிகன் பிள்ளைகளை
யுடலொடுங் கொண்டு கொடுத்தவனைப்
பற்றி யொன்றுந் துயரிலனே.

அவதாரிகை:—இங்குக் குறித்திருக்கின்ற வைதிகப் பிராமணன் பிள்ளைகள் கதை உணரற்பாலது. அதி விசித்தரமானது. அதனுள் அந்தர்கதமாயிருக்கும் நியதிகளைப்பெரியோர்கள் நமக்குத் தெளிவாகப் புகட்டாவிடில் அவை நம்மால் ஊஹிக்க வல்லதல்ல.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வுலகத்தில் மானிட வேஷத்தோடு அவதரித்திருந்ததை ஸாக்ஷாத் பரவாஸுதேவனான எம்பெருமான், தாமே கட்டியகூத்தாகிலும் யதாவஸ்திரமாய் ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் தம் கண்களால் கடாக்ஷிக்க ஆசைப்பட்டான். அவன் தர்ம பூத ஞானத்தால் திவ்விய சக்ஷுஸ்களைக் கொண்டு பார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடியவனானாலும், நாம் நம்முடைய பிரதிபிம்பத்தைச் சிற்சில சமயம் கண்ணாடியில் பார்க்க விரும்புவதுபோல் ஸ்ரீ கிருஷ்ணனான தன்னைத் தானே பார்த்துக்கொள்ள விரும்பினான். இதுவும் ஓர் கூத்தே. அவனது கருத்தை யறியவல்லார் யார். இது நிற்க, ஸ்ரீ கிருஷ்ண பகவான் இதனை அறிந்தனர். இந்தச் சமயத்தில், அர்ச்சுனன் தான் பெரிய வீரனென்று தன்னைத் தானே பாராட்டிக்கொண்டு இறுமாப்பு அடைந்திருப்பதை ஒருவாறு கண்டித்து அவனுக்கு உணர்ச்சி வருவிக்க இது சமயம் என்று நினைத்து ஒரு சம்பவத்தைக் கற்பித்தார். அதாவது ஸ்ரீ கிருஷ்ண பகவான் தான் ஒருநாள் ஏதோ யாகம்செய்வதுபோல் ஏற்படுத்திக்கொண்டு தன்னை ஒருவரும் அந்த யாகத்தின் இறுதிவரையில் கண்டு பேசவேண்டா நிமித்தம் அர்ச்சுனனைக் காவல் வைத்து இந்த உத்திரவை ஆஞ்ஞா ரூபமாக இட்டு அர்ச்சுனனை வாசல்காப்புக் கடைமைக்குக் காலையில் அமர்த்தி யாகத்துக்குப் பிரவேசித்தார். அர்ச்சுனன் இவ்வாறு கடமை பூண்டிருக்கையில் ஓர் வைதீகப் பிராமணன் வாசலில் வந்து கிருஷ்ண பகவானை ஒரு காரியநிமித்தமாகக் காணவேண்டுமென்று உள்ளே செல்ல எத்தனித்தான். அர்ச்சுனன் தடுத்து, "என்ன காரியம் ஐயா, நான் உம்முடைய காரியத்தை நிறைவேற்ற வல்லவன். சுவயம் சக்தன். ஆயுதபாணியாயிருக்கின்றேன். நீவிர் கூறினால் இக்கண

மே முடிப்பேன்" என்று உறுதிமொழி கூறினன். பிராமணனோ, "ஐயா ராஜபுத்திரரே, நீர் சொல்வது உண்மையே! நானும் அதனை நன்கு அறிவேன்! ஆனாலும் உம்மால் என்காரியம் முடியத்தகுந்ததன்று. ஸ்ரீ கிருஷ்ணபகவான்தான் என் வேண்டுகோளை முடிக்கக் கூடியவர், ஆகையால் அவரையேதான் நான் பார்க்கப் போகிறேன்" என்று வாக்குவாதம் செய்வானாயினன். அர்ச்சுனன், "பிராமணனை ஒருவாறு தேற்றிக் காரியம் என்னவென்று தெரிந்துகொள்வோம். நாமோ வரனின் பயனைக் காண்டீபத்தைப் பெற்றுளோம்." என்று இவ்வாறாக எண்ணி, "கூர் அம்பாயினும் வீரியம் பேசேல்" என்ற ஆப்தவாக்கியத்தை மறந்து தன்னால் இயலாதது முண்டோவென்று மிக்க கர்வங்கொண்டு எண்ணமிட்டுப் பிறகு, இந்தப் பிராமணன் பகவானை வேணுமென்று கருதும் காரண மென்னவென்று நயமாய் உபசரித்துக் கேட்டான். அதற்கு அந்தப் பிராமணன் பின்வருமாறு கூறலாயினன், "எனக்கு வருஷா வருஷம் ஆறுவருஷ காலங்களாய் ஒவ்வொரு புத்திரன் பிறந்தான். இவ் ஒவ்வொரு குழந்தையும் பிறந்து தாய் அறியும் முன்னரே ஒருவரும் காணக்கூடாத வகையாய் மறைந்தன-யாரோ தூக்கிக்கொண்டு போய் விட்டனர் போலும். இந்த க்ஷணத்தில் என் மனைவி ஏழாவது பேறு பெறுவதாக நோவுபட்டுக்கொண்டிருக்கிறாள். தக்கணமே ஸ்ரீ கிருஷ்ணன்வந்து பிள்ளை பிறந்தவுடன் காப்பாற்றாவிடில் இக்குழவியும் மூத்தவர்கள்போல் மறைந்துபோய்விடும். ஆகையால் கிருஷ்ணபகவானே ஆபத்பந்துவாய் வந்துநின்று அளிக்க வேண்டும். நீ இடர் செய்யாதே. நான் அந்த மஹாபுருஷனைப் பார்த்து விண்ணப்பம் செய்துகொள்ள வந்திருக்கிறேன்" என்றுசொல்லி முடித்தான். அர்ச்சுனன் இதனைக் கேட்டதும், "யக்ஷர்களோ, ராக்ஷஸர்களோ உம்முடைய குழந்தைகளை அபகரித்துச் சென்றிருக்கிறார்கள். நான் எட்டுத்திக்குகளிலும் பாணங்களை விட்டு உமக்கு ஜனிக்கும்சிசுவைக் காப்பாற்றிக்கொடுப்பேன், என் திறமையைப்பாரும். அப்படிக் காப்பாற்றத் தவறினால் நீர் இடும் ஆணைக்கு உள்படுவேன்" என்று நிரம்ப வேண்டிக்கொள்ளவே, பிராமணன் அர்ச்சுனை அழைத்துத் தன் கிரஹத்துக்குச் சென்றான். அங்குச்சேர்ந்ததும் குழந்தை பிறந்த ஆரவாரமும் அதன் அழுகைக்குரலும் வெளியில் உள்ளவர் எல்லோருக்கும் கேட்டது. வீட்டிற்குள்ளே சென்றதும் மகவைக் காணவில்லை. பழையகதைபோல் ஆகவே, பிராமணன் அர்ச்சுனனை "உன்வீரம் பொய்த்துப் போயிற்றே; உன்னுடைய சுமதலையினின்றும் நான் உன்னை விடுவிக்க இசையமாட்டேன். பிரம்மஹத்தி தோஷத்துக்கு இப்போது உள்ளாகிவிட்டாய்; என் மகனை எனக்கு வரவழைத்துக் கொடுத்தாலன்றி விடமாட்டேன்" என்று வாது கூறி ஸ்ரீகிருஷ்ணபகவானது யாகசாலைக்குப் பலாத்காரமாய் அர்ச்சுனனைத்தன்னுடன் அழைத்துச்சென்றான். வாதம் முற்றவே கூக்குரல் மிகுந்து ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அவதானமின்றி யாகவே யாகம் நிறுத்தலாயிற்று. பகல் லவகம்நின்றுவிட்டது. பகவான் நிமித்தமென்னவென்று அர்ச்சுனனை அழைத்து வினவ, அவ்வீரன் தலைசாய்ந்தவனாய் உள்ளதை உண்மையாய்ச் சொல்லவும், ஸ்ரீகிருஷ்ணபகவான், "அர்ச்சுனா, உனக்காக நாம்பிள்ளையைமீட்கும் நிமித்தம் ஆகாயத்தில்செல்லவேண்டும். இல்லாவிடில் நீ பெரியவொரு பாவத்துக்குஆளாவாய். க்ஷத்திரியர்வாக்குப் பொய்க்கலாகாது. அதைவிட மரணமே ஏற்றது" என்று தன்னுடைய இரதத்தைத் தயாராக்கி அர்ச்சுனனையும் வைதிகனையுந்தன்னுடன் ஏறிக்கொள்ளச் சொல்லி ஆகாயமார்க்கத்தில் தேரினைக் கடாவினர். தேவமானன நாழிகை ஒன்று நம் பூமியின் வருஷங்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேல் ஆகையால் ஸ்ரீ வைகுண்டத்தில் பரவாசுதேவன் தேவமானன ஒரு நிமிஷத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பார்த்தருள ஸங்கல்பித்தது பூமியின் வருஷக்கணக்குப்படி பத்து வருஷங்கள் நிகழ்ந்திருக்கும். மேற்படி பரந்தாமன், பசு பிராமணன் அனையவர்களுக்கு இடையூறு ஸம்பவித்தால் ஸ்ரீகிருஷ்ணபகவான்தான் பூமியை விட்டுத் தன்னுடைய ஜோதிக்குத் திரும்புவார் என்றே வைதீகனுடைய பிள்ளைகளைக் கவர்ந்து எடுத்துப்போனது. மேல் செப்பியபடி, பரந்தாமன் ஸங்கல்பித்ததை நிறைவேற்றவே ஸ்ரீ கிருஷ்ணபகவான் வைகுண்டத்துக்கு ஏகி அவ்வைதீகனுடைய ஏழு பிள்ளைகளையும் உடலுடன் மீட்டு அவனுக்கு அளித்து அர்ச்சுனனுக்குச் சாபத்தினின்றும் மீட்சிசெய்வித்து வாக்குநாணயத்தையும் காப்பாற்றிக் கொடுத்தார்.

இச்சரித்திரம் ஹரிவம்சத்திலும் ஸ்ரீமத்பாகவதத்திலும் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அங்குக் கண்டுகொள்க. மேல் செப்பிய புராணங்களிலுள்ள இரண்டு அம்சங்கள்மாத்திரம் இங்கு எடுத்துரைக்கத் தக்கன. ஒன்று, வடக்கு நோக்கி ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதம் செல்லும்போது North Pole க்கு அருகாமையில் போகையில் ஐந்தாறு மாதம் ஓர் ஒளியும் இல்லாமையால், சேறுபோல வழித்து எடுக்கக் கூடிய இருட்டு இருந்ததாக உரைக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு, பிறகு நீண்ட ஆகாயத்தில் கமனம் செய்கையில் வெளிச்சத்தின் மிகுதியால் கண்கொண்டு பார்க்க முடியாமல் விழிகள் திகைத்துப்போய் ஒன்றையும் காண்கைக்கு அசக்தமாயிற்றென்று உரைக்கிறார். இவ்விரண்டும் தற்காலம் வானசாஸ்திரிகள் கொள்கைக்கு ஒத்திருப்பது வியக்கத்தக்கது.

பதக்குறிப்புகள்:-சுடரொளியாய்த் தேஜஸும் வெளிச்சமும் ஜ்வலித்துநிற்கும் பிரதேசம். அதாவது "வைகுண்டம்'. நின்ற-நித்தியமாய் ஸ்த்திரசாலியாய் நிற்கும். தன்னுடைய சோதி - தனக்கு அஸாதாரணமாய்ச் சொந்தமான ஸ்வயம்பிரகாசம். பற்றி - கவிக்கு விஷயமாக ஆக்கி.

விசேஷக்குறிப்பு:—வேதாந்தங்களில் ஓதிய அர்ச்சராதிமார்க்கத்தின் வழியாய் வைகுண்டம் ஏகுகிறவர்கள் திரும்பி இவ்வுலகம் வருதல் இல்லை. வைதீகன் பிள்ளைகள் அங்குச் சென்றது ஓர் விசேஷசங்கல்பத்தால் ஆனதுபற்றித் திரும்பி உலகம் வந்தார்கள். இவ்வண்ணமே அர்ச்சுனனும்வைதிகனும்ஏகியது, விசேஷ விதிபற்றி யாதலால் அவர்கள் மீண்டு வந்தார்கள்.

உரை:—"பகவத் பாதாரவிந்தத்தில் உறுதியான பக்தியையுடைய மகிமைபொருந்திய அர்ச்சுனனும் வைதீகனும் உடனேற ஒரு நாள் ஒரு போதிலே எல்லாவுலகும் கழிய அநாயாஸமாய்த் திண்தேரைக் கடாவி நிரவதிகதேஜோ விசிஷ்டமான தன்னுடைய ஸ்ரீ வைகுண்டத்திலேயிருந்த வைதீகன் பிள்ளைகளை அவர்கள் உடலோடும் கொண்டு கொடுத்தவனைப்பற்றி என்றும் நான் துயர் இலேன் என்கிறார்"—ஆழ்வார்ப்படி.

பொதிகை நிகண்டு

[789-வது பக்கத் தொடர்ச்சி]

எட்டாவது

ஒலிபற்றிய பெயர்த்தொகுதி.

கூற்றிசைவி ளக்கிளவி நொடிகாதை வாணி
குயிலியம்பேச் சறைபனுவல் வாக்குரைதோல் புகல்கீர்
மாற்றமொழி கதைதீர்ப்புப் பறைசெப்பஞ் சொல்லாம்
வாசகம்பா சுரம்வார்த்தை நடைவசன நான்காந் [த்த
தோற்றுரையாழ் மொழிபதமா மேத்தன்மெய்ச்சல் வாழ்
றுதிவழுத்தல் புகழ்தல்பர சுதல்பரவல் பழிச்சல்
போற்றறேத் திரந்துதித்த லாமாசில் வாழ்த்தே
புகல்வரா சிடைபலகால் விளம்பன்மீ துரையே. 307.

உரைத்தலியம் புதலிறுத்தல் சாற்றலே யாட
லோதல்பக ருதல்குயிறல் புகறல்சொற்றல் மொழி
விரித்தலறைந் † திடல்கரைதல் விளம்பலே கூறன் [தல்
மிழற்றனவி லுதல்பணித்த லிசைத்தலொடு பேசல்
தெரித்தல்செப்ப லேநொடித்தல் சொல்லலெண்மூன்
றிசைச்சொற்றே சிகமாகு மிடித்தல்கழறலுமே[றுகுந்
மருட்டுறுதிச் சொல்லாகு முல்லாபங் குதலை [ருமே.
மழலைகொஞ்சன் மிழலையைந்து மென்சொல்லாய் வ

வரநிலைமை பரம்வாய்மை யானைவே ளாண்மை
வாயுண்மை நிச்சயஞ்சத் தியமன்ற மெய்ப்பேர்
சரதஞ்சா தமுமாகும் வழுதுமிச்சம் பெட்டு
சாதனைவக் கிரம்விகிர்தம் படிறுபொக்கம் வஞ்சம்
கிரவும்வலக் காரமடி யனுசிதமே மாயம்
நிசிதமொடு சடம்பிசின் ஞறுபொய்யின் பேராம்
பரியாதம் பழிச்சொறீச் சொற்சிறுசொற் பழிப்பாம்
பழிமொழியேச் சலர்கவ்வை யம்பலதாய்ப்படியே. 309

படித்தலத்தி யாணம்வா சித்தலோ தலின்பேர்
பாடலுமாம் பிதற்றுதல் விடாதுபே சுதலா
மிடக்கர்கூ கனமறைத்த *சொல்லாகு மேம்பா [லாகுந்
டிசைத்தநெடு மொழிபெருஞ்சொற் பலரறிசொல்
கடைப்பிடியோர்ப் புடன்குறிக்கோ ளிவைதேற்ற மொழி
கடவுதல்வி னவுதலா மெதிர்மொழியுத் தரமே [யாங்
விடைப்பேர்சல் லாபம்விஞ விடைகூடும் பொருளாம்
விரிச்சிகோ ணிமித்தம்வாய்ப் புட்சகுன முதிர்வே.

முதுமைபழ மொழிபழஞ்சொன் முதுமுன்சொல் பழமை
மூதுரையே ‡கதையுங்கா ரணச்சொல்லா மசதி
யிதாகையு நயச்சொல்லா மனத்தந்தான் பொருளே
யில்லாமை புனருத்தங் கூறியகூ றுதலாங்
குதலையெனும் வாளாகோ ளாபேசா வாகுங்
கூவலா கருடனைவா வெனல்கரைதல் கேத
லுதவகுத்த லகவல்விளித் திடலழைத்தற் பேரா
முளைத்தலுமா மறைகூவல் போரழைக்குங் குறியே.

குறளைகொடு வாய்கொண்டி புறங்கூற்றுத்தொடுப்புக்
குஞ்சமொடு பிசினமுமாம் புறத்தோரைப் பழித்த
லறைகூற லாசயஞ்சன் மானமுப சார
மருமைமுக மனுமாமோ டொடுவுமுட னிகழ்வாம்
பெறுமானை வஞ்சனம்வட் டித்தலே சாபம்
பிரமாணஞ் சூழ்சபதம் விரதமுஞ்சத் தியப்பே
ருறுதிகலை விச்சைவித்தை யூதியமே சால
மோதிகல்வி கேள்வியுமாங் கற்றல்பயி லுதலே. 312.

பயிற்சீர்த்தி யேற்றஞ்சீ ரிசைதோற்றம் புகழ்மேம்
பாடொளி கியாதமீக் கூறெடு சுவேதம்
வெயிற்பொருசொன் மலைகீர்த்தி யாமோத்துச் சாய்கை
வேதமிருக் காதிநூன் மறையெழுதாக் §கிளவி
முயற்சுருதி யாரணமா மறைவழிவை திகமாம்
முதல்வேதம் பவுடிகமோ டிருக்காகு மிரண்டாந்
தயித்திரிய மூன்றுமு தார்த்தானு தார்த்தஞ்
சாமங்கோ சிகநாலா மதர்வணமென் றடக்கே. 313.

அடருமுப நிடதமறை முடிஞான பாகை
யருத்தபா கையுங்கரும பாகையுமப் பொருளாம்
பிடகமாக மம்பனுவ லாரிடந்தந் திரமே
பெருஞ்சமையஞ் சூத்திரநூற் பேரேழாஞ் சருக்கம்
படலமத்தி யாயமிலம் பகமோத்துக் காண்டம்
பரிச்சேத நூன்முடிவாம் புறவுரைதந் துரையே
முடிவினணிந் துரைபதிகம் புனைந்துரைபா யிரமே[யலே.
முகவுரைநூன் முகத்தின்பேர் கணக்கெழுத்தெண் ணி

எண்கணிதங் கரணமே கணக்குச்சோ திடப்பேர்
யாப்புப்பாத் தொடர்கவிதை செய்யுளொடு தூக்கே
யண்கவிபாட் டின்பேர்முற் பாவெள்ளை வெண்பா
அகவல்தொகை யாசிரிய முற்பாவே கலிப்பா
மொண்டவசை யடியம்போ தரங்கமரா கப்பேர் [யாம்
முடுகியல்வண் ணகமாஞ்சொற் பொருளருத்த முறை
பிண்டமது பொழிப்பாகு மரும்பொருண்ஞா பகமும்
பிசியுமாந் தொகுதிசெய்தல் பதிகமென்னு மிதுவே.

இதியாச மிலக்கியங்காட் டெலுதா ரணப்பே
ரெழுத்துவண்ணம் வடிவுதன்மை யாகுமொற்றே
பதியாய்தம் புள்ளிதனி நிலைபுலித மாகும் [மெய்யாம்
பலதொடரே குளகமொரு தொடரேமுத் தகமாம்
குதிகீத *மணிவழி யிராகங்கந் திருவங்
கொளைவரிகா மரம்பாட்டுப் பாணிபண்கே யமுமாம்
மதிபாலை யாழ்க்குறிஞ்சி யாழ்மருத யாழ்ச்செவ்
வழியாழாம் பண்பாடற் கேற்றகுரல் யாழே. 316.

குரல்துத்தங் கைக்கிளையே யுழையிளியே விளரி
குணிதார மேழிசையா மிடறுநாக் கண்ணஞ்
சிரநுதனெஞ் சொடுநாசி பிறப்பிடமே ழிசைக்காஞ்
சேர்நான்கு நான்குமூன் றிரண்டுநான் மூன்றே
யிருதொகைமாத் திரையவைக்கா நெடிலேழு மெழுத்தா
மிணர்மெளவன் முல்லைகடம் பேவஞ்சி நெய்தல்
விரைவீரை புன்னைமணம் பாறேன்க ளாநெய்
வெறியேல மாதுளைவா ழைக்கனியுஞ் சுவையே. 317.

சுவைவண்டு கிள்ளைபரி கரிநுணலான் மேடந்
தொனியேழாம் விசுவாமித் திரன்யமன்முக் கதிரே
கவுதமன்கா சிபனீச ராமந்த வோசை
காகுளிமந் †தந்தக்கா மத்திமம்பஞ் சமமே
தவிர்துத்தஞ் சமனிசையாம் வல்லிசையே யுச்சந்
தாரமெச்சங் கோடபதி விபஞ்சிகலங் கருவி
திவவுறுவல் லரியாழ்ப்பேர் வீணைதண்டு வாரி
சிறந்திடுகின் னரப்போ மதினிசை யெழாலே. 318

எழுநரம்பு துயரிகுர ளுடியுந்தந் திரியாம்
யாழ்வலிக்கட் டேதிவவு மாடகமென் பதுவே

† திடல்கைத்தல் (பி - ம்)
* சொல்லார்தன் (பி - ம்)
‡ முதுரையும் (பி - ம்)

§ கேன்வி (பி - ம்)
* மணிவழி (பி - ம்)
† திரந்தக்கா (பி - ம்)

பழகுமுறுக் காணியின்பே ரிசைக்குழல்வங் கியமாம்
பாட்டிரைகோ சனைசும்மை தாநமிடி யோசை
துழனியிசை யுரைபுலம்பு கனைஞா வாரஞ்
சுருதியா குலமோதை தொனியியங்கோ டனையே
செழும்வெருளி யரவமுழ வேழமொலிப் போஞ்
சிலையொலிப்பே ருழையுமரு மரஞ்சமுமாந் தெளியே.
தெளித்தல்விம்மல் குமிறலிரட் டுதலரற்ற லோர்தல்
சிலம்பலியம் புதல்சிதைத்த லிசைத்தலே முழங்கல்
இளித்தலுரற் றுதலுரைத்த லிரைத்தலே யேங்க
லிடித்தல்குளி றுதறுவைத்த லலம்பலே கறங்க
லுழைத்தலமுங் குதறழங்க லுனித்தலே கதித்த
லுலம்பறெவிட் டுதல்கனைத்தல் புலம்பலே சிரற்றல்
பிளிற்றல்முக்கல் குருமித்த லரலலே தெளிர்தல்
பிரற்றலே பயிறன்முரா லுதலுமொலித் திடலே. 320.
ஒல்லெனன் றெரேலெனல்வல் லெனன்மொகே ரென்
[னல்
ஒய்யெனல் வெடேலெனல்பொள் ளெனல்சரே ரென்
கல்லென நிடீரெனலிம் மெனல்விரீ ரென்னல் [னல்
கம்மெனல் படீரெனல்பொம் மெனல்குபீ ரென்னல்
கொல்லெனலம் மெனலிழூஉ மெனலேபொள் ளென்னல்
கொம்மெனலு மனுகரண வோசையின்பே ராகுஞ்
சில்லல்கூப் பிடல்கத்தல் கதறலா முரப்பல்
தெளித்தலதிர்த் திடல்தட்ட லெனக்கடவ தாமே.321

கடகடென் றல்பகபகென் றல்மொளுமொளென் றலுடனே
கலகலென்ற னெறுநெறென்ற னெடுநெடென்றல் கடி
[தாய்ப்
படபடென்றல் மொடுமொடென்றல் சளசளென்றல்
பகபகென்றல் களகளென்றல் திடுதிடென் [பின்னும்
[றலல்லாற்
நடதடென்றல் கொளுகொளென் றன் மொருமொகென்
சரசரென்றல் பரபரென்றல்கரகரென்றறு [றல்வேறு
மடமடென்றல் வெடுவெடென்றல் கொடுகொடெ
வருவனவெல் லாம்விரைவி னோசை [ன்றலிவைபோல்
[யெனு மார்ப்பே. 322.

ஆர்ப்புக்கோ சனைகுமிறல் கோடனையே கொழித்த
லாகுலங்கோ லாகால முலம்பலே கலித்தல்
பேர்ப்பரற்ற லேகறங்க லொடுதமரம் பூசல்
பேரோசை திமிலகுமி லங்கலகங் ‡குமுதம்
போர்ப்புரையப் $படுத்தல்கள களமுழற லபையம்
போராட்டம் பிறகடமா டம்பரமே சத்தங்
கூர்ப்புளசந் தடியேகம் பலையடா பிடியுங் [மே.
குரைத்தலுமாமுப்பதும்பே ரொலியெனப்பேர்*தொழு

‡ குமிதம் (பி - ம்)
$ படுதல்கள (பி - ம்)
* தருமே (பி - ம்)

எட்டாவது ஒலிபற்றிய பெயர்த் தொகுதி முற்றும்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[794-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5. களம் 2.

இடம்:—பிலிப்பை. போர்க்களம். ப்ரூட்டஸூம் மெஸ்ஸாலாவும் வருகின்றனர்.

ப்ரூட்டஸ்:—விரைக, விரைக, மெஸ்ஸாலா, நின் பரியினில் விரைந்து, மறுபுற மிருக்கும் சேனைகளுக்கு இக் கடிதங்களைக் கொடு (1).

[பெருமுழக்கம் கேட்கின்றது.]

உடனே அவர்கள் புறப்படட்டும்; ஆக்டேவியஸ்வின் சிறையில் ஆர்வமின்றி நடக்கக் காண்கின்றேன். (2). துண்ணென எதிர்த்து மண்டினு லவர் உடைந்து சாய்வார் (3). பரியினில் விரைக, விரைக, மெஸ்ஸாலா; அவர்களெல்லாம் வந்து சேரட்டும். (4)

(போகின்றனர்)

இரண்டாம் களம் முற்றிற்று.

அங்கம் 5. களம் 3.

இடம்:—பிலிப்பை. போர்க்களத்தில் மற்றொரு பாகம்.

காஸ்ஸியஸ்ஸூம் டிடினியஸ்ஸூம் வருகின்றனர் போர் முழக்கம் கேட்கின்றது.

காஸ்ஸியஸ்:—ஹா! பார், டிடினியஸ், பார், இக் கயவர் இரிந்தோடுகின்றனர்! (1). என்னைச் சார்ந்தவர்க்கு யானே பகைவனாயினேன். இந்த வென் கொடிபிடிப்போன் இவன், புறந்தருவானாயினன். அக் கோழையைக் கொன்று அதனை அவனின்று எடுத்துக்கொண்டேன். (2).

போர் துவக்கிவிட்டது. சமரின் நிகழ்ச்சிகள் சிலவற்றை ஷேக்ஸ்பியர் இந்தக் களங்களில் காட்டி நடத்துகின்றார்.

(1) படையின் ஒரு பகுதியை ப்ரூட்டஸூம் மறுபகுதியைக் காஸ்ஸியஸூம் நடத்துகின்றனர். அவ்வாறே மறுதிறத்தில் ஆண்டனியும் ஆக்டேவியஸ்ஸூம் சைனியங்களைப் பிரித்து நடத்துகின்றனர்.

(2) இதனிடையில், ஆக்டேவியஸின் சைனியம் ஆர்வமின்றி அயர்ந்திருப்பதுபோல் ப்ரூட்டஸிற்குத் தோன்றுகின்றது. (சிறை—பக்கம்)

(3) ஆதலால் காஸ்ஸியஸ்ஸின் சேனையும் தன்னுடைய சேனையுடன் சேருமாயின், ஒருங்குசென்று ஆக்டேவியஸ்ஸின் சேனையைச் சடுதியில் எதிர்த்துத் தகர்த்துவிடலாம் என்று எண்ணிய ப்ரூட்டஸ், அவர்களை உடனே அழைத்து வருமாறு மெஸ்ஸாலாவை அனுப்புகின்றான்.

(4) அவர்களெல்லாம்—மறுபுறமிருக்கும் காஸ்ஸியஸ்ஸின் சேனை.

(1) கயவர் என்றது, தன் படைஞரை. இரிந்தோடுதல்—பகைவர்க்குப் பயந்து ஓடுதல்.

(2) காஸ்ஸியஸ்ஸின் கொடியைத் தாங்கியிருப்பவனும் பயந்தோடப் புகுவதைக் கண்ட காஸ்ஸியஸ், அந்த அவமானம் நேராமல் அவனைக் கொன்று அவன் கையிலிருந்த கொடியைத் தான் எடுத்துக்கொண்டான். பகைவனைப் போல் தன் படைஞனைத் தானே கொல்லவேண்டி நேர்ந்ததற்குக் காஸ்ஸியஸ் வருந்துகின்றான்.

(3) ஆக்டேவியஸின் படைஞர் அயர்ந்திருந்தனர் என்று எண்ணிய ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ்ஸூம் தன்னுடன் வந்து சேரும்படி கட்டளையிட்டு, ஆக்டேவியஸ்ஸை அப்பொழுதே துண்ணென எதிர்க்கத் துணிந்ததை முன்களத்திற் கண்டோம். அதன் பயன் இங்குத் தெரிகின்றது. காஸ்ஸியஸ் ப்ரூட்டஸூடன் சேரமாட்டாமல் இவன் படையை ஆண்டனியின் படை சூழ்ந்து தடுத்துவிட்டது. ஆதலின், ப்ரூட்டஸின் சைனியத்தை ஆக்டேவியஸின் சைனியம் உடைத்துவிட்டது. காஸ்ஸியஸ் தன்னை வந்து சேருமளவு காத்திராமல், அவசரப்பட்டு, எதிர்க்கும்படி கட்டளை கொடுத்ததால் இந்தத் தோல்வி நேர்ந்ததென்று டிடினியஸ் கூறுகின்றான்.

டிடினியஸ்:—ஹோ காஸ்ஸியஸ்! ஆக்டேவியஸ்ஸின்மீது வாய்த்தவொரு செவ்விதனை ஆர்வமுடனவாவித் தன் மொழியினை ப்ரூட்டஸ் மிகவும் முந்திக் கொடுத்துவிட்டான் (3). நம்மையெல்லாம் ஆண்டனியோ முற்றிலுஞ் சூழ்ந்திருக்க அவன் படைஞர் கொள்ளைபோயினர்.

[பிண்டாரஸ் வருகின்றான்.]

பிண்டாரஸ்:—அகன் றோடுக. என் தலைவ, அகன்றோடுக. தலைவ, மார்க் ஆண்டனி உன் கூடாரத்திலிருக்கின்றான்! ஆதலின், ஓடுக, பெருந்தகைக் காஸ்ஸியஸ், அகன் றோடுக.

காஸ்ஸியஸ்:—குன்றிது இருக்குந்தூரம்போதும் (4). பார், பார், டிடினியஸ், எரியெழக் காண்கின்ற அவ்விடத்தில் இருக்குங் கூடாரங்கள் என்னுடையவைகளா?

டிடினியஸ்:—ஆம், தலைவ.

காஸ்ஸியஸ்:—என்பால் அன்புடையையாயின், என் குதிரைமீ தேறி, அதோ அங்கிருக்கும் படைகளினருகு உன்னை அது கொண்டுசென்று மீண்டு மிங்குக் கொணரும்வரை, உன் முள்ளினை அதனுள் புதைத்திடுவாய் (5). அதோ, அப்படைஞர் நண்பரோ பகைவரோ, என்பதெனக்கு நிச்சய மாகவேண்டும்.

டிடினியஸ்:—மனத்தின் வேகத்தோடு மீள்வேன் யான். (6)

[போகின்றான்.]

காஸ்ஸியஸ்:—போ, பிண்டாரஸ், அக்குன்றின்மீ தின்னும் உயர வேறு. என்றுமே என்பார்வை, கனமுடைத்து (7). டிடினியஸ்ஸைக் கவனித்து, களத்தின்கண் யாது காண்கின்றாயென்பதை எனக்குச் சொல்.

[பிண்டாரஸ் போகின்றான்.]

முதன்முதல் யான் உயிர்த்தது இற்றைத்தினமே (8). காலம் சுற்றிவந்துவிட்டது. எவ்விடத்து யான் துவக்கினேனோ அவ்விடத்தே முடித்திடுவேன். என் வாழ்நாள் தன் வட்டம்முழுவதும் ஓடியாய் விட்டது. (9)— ஏடா, என்ன செய்தி (10).

பிண்டாரஸ்:—(மேலிருந்து) ஐயோ தலைவ!

காஸ்ஸியஸ்:—செய்தி என்ன?

பிண்டாரஸ்:—தன்னை நோக்கிப் பாய்ந்துவருங்குதிரை வீரர்களால் டிடினியஸ் சூழப்பெறுகின்றான். இருப்பினும், அவனும் அவாருகு விரைந்தடைகின்றனன். இப்போ, டிடினியஸ்!—இதோ சிலர் இறங்குகின்றனர்—ஹோ! அவனும் இறங்குகின்றான்—சிறைப்பட்டான் (ஆரவாரம் கேட்கின்றது), கேள்! மகிழ்ச்சியால் அவர்கள் கூவுகின்றனர். (11).

காஸ்ஸியஸ்:—இறங்கிவிடு. இன்னமொன்றும் பார்க்காதே. என் நட்பிற்சிறந்தவன் என் முகத்தெதிரே சிறைப்படக் காண்பதற்கு இத்தனைகாலம் வாழ்ந்திருந்த, ஐயகோ, கோழையேன், யான் (12).

[பிண்டாரஸ் மறுபடி வருகின்றான்]

அடே, இங்கு வா. பார்த்தியாவில் (13) நானுன்னைச் சிறைப்பற்றியபோது, உன் உயிரைக்காத்து, யான் எக்கட்டளை இட்டேனாயினும் அதனை நீ இயற்றவேண்டுமென்று உன்னைச் சத்தியம் செய்யவைத்தேன் (14). வா இப்பொழுது, உன் சத்தியத்தை நிறைவேற்று. இப்பொழுது நீ விடுதலை அடைந்த

(4) காஸ்ஸியஸ் இருக்குங் குன்று போதிய தூரத்திலிருப்பதால், இன்னும் அகன்றோட அவசியமில்லை, என்கின்றான்.

(5) முள் - குதிரையைத் தூண்டும் கால்முள் (Spurs). அதனுள் - குதிரையினுள். மிகைவிரைவிற் சென்று, அப்படைஞர் நம் பகைவரோ அல்லது நண்பரோ என்பதைத் தெரிந்துவா—என்பது பொருள்.

(6) மனோவேகமாய்ச் சென்று வருவேன், என்பது பொருள்.

(7) எப்பொழுதும் எனக்குக் கூரிய பார்வை இருந்ததில்லை—என்பது பொருள். ஆகையால் "நீயே அக்குன்றின் மீதேறி என்ன நடக்கின்றதென்பதைப் பார்த்துச் சொல்" என்று டிடினியஸ்ஸிற்குக் கட்டளை இடுகின்றான்.

(8) உயிர்த்தல் - மூச்சுவிடுதல். இது என்னுடைய பிறந்த நாள், என்பது பொருள்.

(9) தற்கொலை புரிந்துகொள்வதற்குத் துணிகின்றான் காஸ்ஸியஸ். பிறந்த நாளிலேயே சாகின்றதன் தன்மையை இவ்வாறு கூறுகின்றான். வாழ்நாள் ஒரு வட்டம்போலவும் பிறந்தநாளில் துவக்கி அவ்வட்டத்தைச் சுற்றிவந்து, அத்தினத்திலேயே மறுபடி முடிகின்ற தன்மையை இச்சொற்களால் காஸ்ஸியஸ் குறிக்கின்றான்.

(10) குன்றின் மேலே சென்றிருக்கும் பிண்டாரஸ்ஸைக் கேட்பது இது.

(11) டிடினியஸ் பார்த்துவரச் சென்ற படை, காஸ்ஸியஸ்ஸிற்கு நட்புடையதேயன்றிப் பகையானதன்று. ஆதலால், டிடினியஸ் தம்மை நோக்கி வருவதைக் கண்ட அவர் ஆசையுடன் தம் குதிரைகளைத் தூண்டி அவனை எதிர்கொள்ள வருகின்றனர். டிடினியஸூம் ஆர்வமுடன் அவர்பால் விரைகின்றான். இதனை, பிண்டாரஸ் விபரிதமாகப் பொருள்செய்து, பகைவர் டிடினியஸ்ஸைப் பிடிக்க வருவதாகக் காஸ்ஸியஸ்ஸிற்குக் கூறி, டிடினியஸ்ஸை அவர்கள் அன்புடன் தழுவியதை, அவன் சிறைப்பட்டதாகவும்செப்பிவிடுகின்றான். பகைவராயின், டிடினியஸ் திரும்பி ஓடாமல் அவர்களிடம் ஏன் நெருங்கவேண்டுமென்பதைப் பிண்டாரஸ்ஸாகிலும், காஸ்ஸியஸ்ஸாகிலும் கருதாமல் மோசம் போயினர்.

(12) டிடினியஸ் பகைவர்கையில் அகப்பட்டான் என்றெண்ணிக் காஸ்ஸியஸ் மனம் இரங்குகின்றான்.

(13) பார்த்தியா என்பது ஓர் தேசம். அங்கே யுத்தத்தில் காஸ்ஸியஸ் பிண்டாரஸ்ஸைச் சிறைப்பற்றித் தன் அடிமை யாக்கிக்கொண்டான்.

(14) நான் சொல்லியதை யெல்லாம் நீ செய்வதாகச் சத்தியம் செய்தமையால் உன்னை அப்பொழுது கொல்லாமல் அடிமையாகமாத்திரம் கொண்டேன்—என்பது பொருள்.

(15) ஸீஸரை நான் கொன்ற இவ் வாளையே கொண்டு என் மார்பில் குத்தி என்னைக் கொன்றுவிடு—என்பது பொருள். மருமம் - மார்பு.

வனுவாய். வீஸரின் குடலினூடு ஓடிய நல்ல இவ் வாளினுல் இந்த வென் மருமத்தைத் தேடுவாய். (15).பதிற்சொல்ல நிற்காதே(16) இந்தா, பிடியை வாங்கிக்கொள். என் முகத்தை மூடியாயபின்—இதோ ஆய்விட்டது—கத்தியை நீ செலுத்திவிடு—வீஸரே, உன்னைக் கொன்ற கத்தியினுலேயே உன் பழி தீர்க்கப்பெற்முய் (17).

[சாகின்றுன்.]

பிண்டாரஸ்:—ஆதலின், யான் விடுதலை யடைந்திருக்கின்றேன். எனினும், என் இஷ்டப்படி செய்யத் துணிந்திருப்பேனுயின் இவ்வாறு ஆயிருக்கமாட்டான் (18). உரோமன் ஒருவனும் கண்டுகொள்ளாவகை, பிண்டாரஸ் இத்தேயத்தை விட்டு நெடுந்தூரம் ஓடிச் சேர்வான் (19).

[போகின்றுன்]

(16) ஒன்றும் நீ பதிலுரைத்துக் காலதாமதம் செய்ய வேண்டாம்—என்பது பொருள்.

(17) பிண்டாரஸ், காஸ்ஸியஸ்ஸைக் குத்தினுன் என்பது சொல்லப்படவில்லையாயினும், காஸ்ஸியஸ் முகத்தை மூடிக்கொண்டதும், அவன் எதிர்பார்க்கும் முன்னரே, எசமானன் சொல்லியபடி பிண்டாரஸ் அவனைக் குத்திவிட்டானென்று குறித்துக்கொள்ளவேண்டும்.

(18) உன்னைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆயினும், உன் கட்டளையை மறுக்க யான் துணியவில்லையாதலின், நான் இப்பொழுது (உன்னைக் கொன்று) விடுதலை அடைந்தவனுயினேன்.

(19) மறுபடி நான் உரோமர்களால் சிறைப்பற்றப்படாவண்ணம் வேற்றுநாட்டிற்கு ஓடிச்செல்வேன்—என்பது பொருள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[770-வது பக்கத் தொடர்ச்சி]

சழக்கியர்க்கு முண்டோ ரழகு.

மூன்றுலகுடையவன் தங்கை மூக்கிலளாயதன் காரணம் யாவதேயாயினும், அச்செப்தி மிக விரைவில் நகரடங்கலும் பரவ, அரக்க நங்கையர் அவள்பால் இரைத்திரைத்துப் போந்த பரிசினைக் கம்பர் இனிக் கூறுகின்றனர்.

கரையறு திருநகர்க் கருங்க ணங்கைமார்
நிரைவளைத் தளிர்க்கைக ணெரித்து நோக்கினர்
புரையறு பாலென நிலையிற் பின்றிய
உரையின ரொருவர்முன் னொருவ ரோடினர்

[அளவற்ற செல்வம் வாய்ந்த இலங்கையிலுள்ள, கரிய கண்களையுடைய அரக்கமாதர், சூர்ப்பணகையின் நிலையைப் பார்த்து, வரிசையாக வளையல்கள் அணிந்த தளிர்போன்ற தம் கைகளை நெரித்துக் கொண்டு, பிரை இட்ட பால் போல் திரிந்து தடுமாறிய வார்த்தையினர்களாய் ஒருவருக்குமுன் ஒருவர் ஓடினர்.]

முழவினில் வீணையின் முரளி யாழினிற்
றழுவிய குழலினிற் சங்கிற் றூரையில்
எழுகுர லின்றியே யென்று மில்லதோ
ரழுகுரல் பிறந்ததவ் விலங்கைக் கன்றரோ

[மத்தளத்திலிருந்தும், வீணையிலிருந்தும், முரளியிலிருந்தும், யாழிலிருந்தும், கையில் தழுவிய புள்ளாங்குழலிலிருந்தும், சங்கிலிருந்தும், தாரையிலிருந்தும் உண்டாகின்ற மங்கல ஒலிகள் ஒன்றுமில்லாமலே, என்றைக்கும் கேட்டில்லாதவோர் அழுகைக்குரல் அவ் விலங்கையில் அன்று உண்டாயிற்று.]

கள்ளுடை வள்ளமுங் களித்த தும்பியு
முள்ளமு மொருவழி கிடக்க வோடினர்
வெள்ளமு நாணுற விரிந்த கண்ணினர்
தள்ளுறு மருங்கினர் தழீஇக்கொண் டேகினர்

[அகலத்தில் கடலும் ஒப்பாகாமல் வெட்கமடையும்படி பரந்த கண்களையுடைய அம்மாதர்கள், கள்உடைய கிண்ணங்களும், களிப்புற்ற வண்டுகளும், அம் மதுவை அருந்துதற்கு விருப்பமுடைய அவர் மனங்களும் ஒரு பக்கத்திலே கிடக்க, துவளும் இடுப்பை உடையவர்களாய், ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு ஓடிவருவாராயினர்.]

நாந்தக வுழவரை நாட்டுந் தண்டத்தர்
காந்திய மனத்தினர் புலவி கைம்மிகச்
சேந்தக ணதிகமுஞ் சிவந்து நீருக
வேந்தனுக் கிளையவ டாளின் வீழ்ந்தனர்

[வாள்கொண்டு பகைவர் உடலை உழுகின்ற வீரர்களாகிய தம் நாயகரைக் காமக் கலகத்தில் தண்டிக்கும் அதிகாரம் உடைய அம்மகளிரிற் சிலர், புலவியின் மிகுதியால் கோபங்கொண்ட மனமுடன் சிவந்த கண்கள் இன்னும் அதிகமாகச் சிவந்து நீர் சொரிய இராவணனுக்குத் தங்கையாகிய சூர்ப்பணகையின் கால்களில் விழுந்தனர்.]

பொற்றலை மரகதப் பூக நேர்வுறச்
சுற்றிய மணிவடந் தூங்கு ஊசலின்
முற்றிய வாடலின் முனிவுற் றேங்கினர்
சிற்றிடை யலமரத் தெருவு சேர்கின்றார்.

[பொன்போன்ற குருத்துக்களையுடைய, பச்சை நிறமான பாக்குமரங்களில் ஒழுங்காக அமையும்படி கட்டிய நவரத்தினங்கள் இழைத்த வடங்களில் தொங்குகின்ற ஊஞ்சலில் ஆடிய ஆட்டத்தினிடையே ஊடல்கொண்டு ஏங்கியிருந்தவர்கள் தம் சிறிய இடைகள் தளர்ந்துவருந்தும்படி தெருவில் வந்து சேர்ந்தனர்.]

எழுவென மலையென வெழுந்த தோள்களைத்
தழுவிய வளைத்தளிர் நெகிழத் தாமரை
முழுமுகத் திருகயன் முத்தி னுலிகள்
பொழிதரச் சிலருளர் பொருமி விம்முவார்

[மற்றுஞ்சில மகளிர், தூண்போலவும் மலைபோலவும் வளர்ந்துள்ள தம்நாயகர் தோள்களைக் கட்டியணைத்த தளிர் போன்ற கைகள் நெகிழவும், தாமரைமலர் போன்ற அழகு வாய்ந்த முகத்திலுள்ள, இரண்டு கயல் மீன்கண்கள் முத்துக்கள் போன்ற நீர்த்துளிகளைச் சிந்தவும் விம்மிவிம்மி அழுவாராயினர்.]

நெய்ந்நிலை வேலரச னேருநரை யில்லான்
இந்நிலையு ணர்ந்தபொழு தென்னிலைய னென்னு
மைந்நிலைநெ டுங்கண்மழை வானிலைய தாகப்
பொய்ந்நிலை மருங்கினர் புலம்பினர் புரண்டார்.

[தனக்கு நேரான பகைவர் இல்லாதவனை, கினம் தங்கிய வேலாயுதத்தையுடைய நமது அரசனை இராவணன்,

சூர்ப்பணகைக்கு நேர்ந்த இதனை உணர்ந்தபோது என்ன ஆவானே என்று, பொய்யோ என்று சொல்லத் தகுந்த இடுப்பையுடைய மாதர்கள், மையிட்ட நீண்ட கண்கள் சொரியும் நீரானது மழை பொழியும் மேகம்போல ஆக, புலம்பிப் புரண்டனர்.]

மனந்தலை வருங்கனவ ரின்சுவை மறந்தார்
கனந்தலை வருங்குழ லொசிந்துகலை சோர
நனந்தலைய கொங்கைக டதும்பிட நடந்தா
ரனந்தரிள மங்கைய ரழுங்கியயர் கின்றார்

[நித்திரை செய்துகொண்டிருந்த இளமங்கையர், கனவில் மனத்தினிடத்தே தோன்றிய தம் கணவரோடு அனுபவிக்கின்ற இன்பச் சுவையையும் மறந்தவர்களாய், மேகம் போன்ற தம் கூந்தல் நிலைகுலையவும், ஆடை சோரவும், அகன்ற பெரிய முலைகள் ததும்பவும் நடந்து மனம் வருந்திச் சோர்கின்றவரானார்]

அங்கையி னரன்கயிலை கொண்டதிற லையன்
தங்கைநிலை யிங்கிதுகொ லென்றுதளர் கின்றார்
கொங்கையிணை செங்கையின் மலைந்துகுலை கோதை
மங்கையர்க ணங்கையெதிர் வந்துவிழு கின்றார்

[அவிழ்ந்த கூந்தலையுடைய மங்கையர்—சிவபிரானது கைலாய மலையை அகங்கையில் எடுத்த வல்லமையுடைய இராவணனது தங்கையின் நிலைமை இப்படி ஆயிற்றே! என்று சொல்லித் தளர்கின்றவர்களாய், தம் முலைகள்மீது சிவந்த தம் கைகளால் அடித்துக்கொண்டு அச்சூர்ப்பணகையின் எதிரே வந்து விழுகின்றவர் ஆயினர்]

இலங்கையில் விலங்குமிவை யெய்தலில வென்றும்
வலங்கையி லிலங்குமயின் மன்னனுள னென்ன
நலங்கையி லகன்றதுகொ னம்பினென நைந்தார்
கலங்கலி னிலங்கணிணை வாரிகலுழ் கின்றார்

[வலக்கையிலே விளங்குகின்ற வேற்படையையுடைய இராவணன் இருக்கின்றான் என்ற காரணத்தால், இலங்கையில் மிருகங்களுங்கூட எப்பொழுதும் இத்தகைய துன்பங்களை அடைதல் இல்லை. இனி நம் கைகளை விட்டு நன்மை யெல்லாம் நீங்கிவிட்டனவோ, என்று சொல்லி, அழகிய தம் கண்கள் இரண்டும் கலங்கல் நீர்போல, நீர் பெருகுவாராயினர்.]

அழுகின்ற கண்ணினர் இவ்வாக்கியரையும், மானுட மடந்தையர்க் கிணைகொளச் சால அழகியராகவே கம்பர் அமைத்திருக்கின்றார். "நிரைவளைத் தளிர்க்கையர் அவர்; பாலெனும் மொழியினர்; வெள்ளமு நாணுற விரிந்த கண்ணினர், தள்ளுறு மருங்கினர், சிற்றிடை அலமர ஒல்குவார், தாமரை முழுமுகத்திரு கயல் புரள்பவர், மைந்நிலை நெடுங்கண்ணினர், பொய்ந்நிலை மருங்கினர், கொங்கைகள் ததும்பிட நடப்பவர், செங்கையினர்"—என்றென்று தீட்டப் பெறுகின்ற இவர்களுக்கும், வான்மீகமுனிவரால், "சரிந்து பெருத்த வயிறும், கோணிய கண்களும் சிவந்த கூந்தலும், காணுங் கண்கள் கைக்கும் உருவமும்" அளிக்கப்பெற்ற சூர்ப்பணகைக்கும் வெகுதூரம். அழகுக்கழகு செய்ய முயல்வார் பலர்; மற்று, அழகிலதற்கும் அழகு செய்ய விழைபவர் மெய்யுணர்வுடைய புலவர். வீணிற்கொருவரை ஏன் விகாரப்படுத்தவேண்டும். கூந்தலின் திறம் கூறப்பெறவில்லை என்பதல்லால், கம்பர் தம்சித்திரத்தில் அடங்கிய இவ்வரக்க மாதர்க்கு யாதுங்குறையில்லை. எனினும், சிவந்த கூந்தலும் கோரப்பற்களும் அரக்கர் குலத்திற்கு அடிப்படையான அடையாளங்கள் ஆதலால், அவைகளையும் மறுத்துப் பொய்க்கக் கம்பரும் மனங்கொள்ளவில்லை. முன் சூர்ப்பணகையைச் சொல்லுங்கால், "செம்பராகம் படச் செறிந்த கூந்தலாள்", என்றும், "எயிறுடை அரக்கி" என்றும் அவளைத் தெரிவித்து விட்டதன் காரணம் இதுவே. இவைகளுக்கிடையேயும் அரக்கியர்பால் ஓர் அழகு தங்கியது போதும். தாடகையைக் கொண்டு சழக்கிய ரழகைச் சோதித்தல் நேரிதன்று; சாபத்தால் சழக்கியானவள் அவள். எக்குலத்தினரே யாயினும் அக்குலத்தினர் அதனுள் இனிதமைவார். மற்று, குலங் கெட்டு மாறினவர்களே இயற்கையுடன் ஒருகால் உருவமுந்திரிந்த கொடியோராவர். இனிக் கதையினைத் தொடர்வோம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:	
சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக ”	0-12-0
பிருங்காமலக ”	0-12-0
ஸ்திரீகளுக்கு	
ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

I.D.L.ச்யாவனப்ராசா I.D.L.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L.61, மெடிகேடட்-டப்பி

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெ காஸ்ட்ராலகஸ்

ஜவரேக் ஸோல் எவ்வித ஜவரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

கலா நிலயச் சொல்லூடாட்டம் 10.



இடம்—வலம்

1. ஓர் நிறம்.
4. நீரோடைக் கதவு.
7. ஒரு வகை காய்.
8. ஓர் காட்டு மிருகம்.
9. அறுகாற்சிறுபறவை
10. ஊர்ந்துசெல்.
12. ஓர் நீர்வாழ் ஜந்து.
14. மெதுவாக.
15. ஓர் நீர்ப் பூ.
16. மயில் பீலி.
17. கயிறு.
18. மயக்கம்.
19. அழகு.
21. மேல்.
23. வேகம்.
26. வாருங்கள்.
28. தேவாரம் பாடியவர்களில் ஒருவர்.
30. கொலை.
32. குரங்கு.
33. துறுத்து.
34. ஓர் நிறம்.
35. மேலோர்.
36. குற்றம்.

மேல்—கீழ்

1. குழந்தை.
2. எழுதுதல்.
3. கீர்த்தி.
4. இறந்தல்.
5. ஓர் நீர்ப் பூ.
6. ஓர் சிறு பறை.
11. தேர்ப் பாகன்.
13. பலம்.
14. பூச.
15. அரைக்குங் கல்.
16. அபஜயம்.
20. ஆசைப்பட்டு.
22. ஓர் மதத்தினர்.
24. மலை.
25. அமைச்சன்.
27. மனம் வருந்த.
28. சக்கரம்.
29. குறைய.
31. இளையவன்.
34. ஜலம்.

கடைசிநாள் :—1932 வருடம், நவம்பர் மாதம், 21 தேதி.

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை **மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.** என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

சொல்லூடாட்டம் நம்பர் 8. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம்:—1. அந்தி; 3. கோடை; 4. மாது; 6. வீணை; 7. வஞ்சி; 8. பரிதி; 9. தவலை; 11. கதலி; 13. முல்லை; 14. மன்ன; 15. பகை; 16. யமுனை; 17. படம்; 18. குதிர்; 20. கத்தி; 21. பதி; 23. தேள்; 24. கரன்; 25. ஆடவர்; 27. விகடம்; 29. வன்னி; 30. கொடுக்க; 32. தையல்; 33. கும்பம்.

மேல்—கீழ்:—1. அணைதல்; 2. திவலை; 3. கோசிகன்; 4. மாரி; 5. துதிக்கை; 8. பலி; 10. வலையர்; 12. தனபதி; 13. முதுகு; 14. மனைகள்; 15. பம்பரம்; 19. திருடன்; 22. தின்; 23. தேர்; 24. கடகம்; 25. ஆவணி; 26. வனிதை; 27. விடு; 28. கக்கு; 30. கொல்; 31. அம்.

நேரியவிடை யனுப்பியவர்:—S. சந்தான கோபால ஐயர், கண்டாச்சிபுரம். ராம. அருணசலம், தேவகோட்டை. A. P. L. ஷண்முகம் செட்டியார், வேகுப்பட்டி. K. அல்லாபிச்சை, கோம்பை. N. நாகசுந்தரம், உத்தமபாளயம். R. தியாகராஜன், காயாமொழி. U. N. இராமசுவாமி நாயுடு, உடுமலைப்பேட்டை. சி. கந்தையா, மன்னார். T. R. வெங்கடேசன், திருச்சங்கோடு. ஐ. சொக்கலிங்கம், உக்கிரன்கோட்டை. R. S. இரத்னசபாபதி சர்மா, கோகுவில். முத்து வள்ளியப்ப செட்டியார், வேந்தன்பட்டி. U. N. காளிமருதப் பிள்ளை, மேட்டூர். S. நடராஜன், தக்காலா. S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீ வைகுண்டம். M. கங்கேசு, கெட்டா (F. M. S.). K. ஆறுமுகம், தக்காலா. A. T. சுப்பையா, தக்காலா. முத்து ராமலிங்கம், தக்காலா. V. நரசிம்ம ராவ், பெரம்பூர். U. V. இராஜலக்ஷ்மி, உடுமலைப்பேட்டை. எசோதையம்மாள், உடுமலைப்பேட்டை. U. N. அழகர் சாமி நாயுடு, உடுமலைப்பேட்டை. U. S. நாராயண ஐயர், உடுமலைப்பேட்டை. A. சுருளியாண்டி, கோம்பை. S. திருநாவுக்கரசு, கொளம்போகம். S. N. இராமஸ்வாமி ஐயங்கார், சங்கரிதுர்க்கம். S. M. சொக்கலிங்கம், கொழும்பு. G. P. இராமச்சந்திரன், சென்னை. K. N. கதிரேசன் செட்டியார், தேவகோட்டை. A. செங்கல்வராய செட்டி, சென்னை. V. கருப்பையா, தக்காலா.

பரிசு பெற்றவர்:—S. N. இராமஸ்வாமி ஐயங்கார், சங்கரிதுர்க்கம்.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெருகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல எட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்றுறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயல்வேண்டா. விளம்பிறைல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி. அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அமைரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுறைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

இத்தாலிய சந்யாசி:— ஸால்வடோர் சியோபியா என்னும் பெயருடைய இத்தாலியர் பௌத்த மதத்தைத் தழுவிச் சந்யாசம் பூண்டு இலங்கையில் வசித்து வருகின்றார். இப்பொழுது அவர் லோகநாத் என்று அழைக்கப்படுகின்றார்.

இவரது பெற்றோர் இத்தாலிய நாட்டினர், மிக்க செல்வமுடையவர். இவர் சித்திரக்கலையிலும் விஞ்ஞான சாத்திரத்திலும் நிபுணத்துவம் உடையவர். புத்தமத நூல்களில் இவர் ஆராய்ச்சி செய்ததன்பயனாகஇவர் புத்த மதத்தைத் தழுவினார்.

மேனாட்டார் இந்தியாவிற்கு விஞ்ஞான சாஸ்திரங்களைப் போதித்தனர் என்றும், இந்தியா மேனாட்டாருக்கு ஆத்மஞானத்தைப் போதிக்க முற்படவேண்டுமென்றும் இரத்த வெறிகொண்டுள்ள ஐரோப்பா சமாதான வழியில் நடக்கவேண்டுமெனில் ஐரோப்பாவில் புத்தமத போதனை பரவவேண்டும் என்றும், மற்ற ஒப்பந்த முயற்சி எதுவும் எப்பயனையும் தாராது என்றும் கூறுகின்றார். இவர் இலங்கையிலிருந்து பௌத்த சந்நியாசிகள் சிலரைத் தம்மோடு அழைத்துக்கொண்டு மேனாட்டிற்குச் சென்று பௌத்தமதப் பிரசாரம் செய்ய எண்ணியிருக்கின்றார்.

***

இங்கிலாந்தில் வேலையில்லாமை:—இவ்வாண்டு செப்டம்பர் மாத இறுதியில் எடுக்கப்பெற்ற கணக்கின்படி இங்கிலாந்தில் 28,50,000 பேர் வேலையில்லாதவர்கள் என்று தெரிகின்றது.

***

பார்லிமெண்டில் சத்யாக்கிரஹம்:— காந்தியடிகளுடன் இந்தியா விஷயமாய் ஒரு சமாதான முடிவைச் செய்துகொள்ளும்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டாரை வற்புறுத்தும் பொருட்டு, சமாதானத்தை விரும்பும் சில ஆங்கிலேயர் பார்லிமெண்டு சபையில் மறியல் செய்யத் தீர்மானித்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

***

சங்கராச்சாரியார் ஸ்வாமிகள்:— சென்னை மயிலாப்பூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் சிவநாம மகிமையைப்பற்றிச் சென்ற வாரம் செவ்வாய்க் கிழமை ஒரு பிரசங்கம் செய்தார். அப்பொழுது, ருக், எஜுர், சாமம் என்னும் வேதங்களில் எஜுர் வேதம் நடுவிடம் பெற்றதென்றும், அந்த எஜுர்வேதத்தின் நடுவில் ருத்ரம் சொல்லப்பெற்றிருக்கின்றதென்றும், பஞ்சாக்ஷரத்தின் நடுவில் சிவ என்னும் சப்தம் நடுநாயகமாக விளங்குகின்றதென்றும், ஆகையால் வேதத்தின் ஹிருதயம் சிவநாமமென்றும், அந் நாம வழிபாட்டால் இப்பிறவியை அறுக்க வியலும் என்றும் விளக்கினார்.

***

ஸர். ராதாகிருஷ்ணன்:-சென்றவாரம், ஆந்திர சர்வகலாசாலையின் உதவி சான்ஸலரான ஸர். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு எல்லூர் ஜில்லா போர்டார் ஓர் உபசாரப் பத்திரம் அளித்தனர். அன்னதற்கு அவர் கூறிய பதிலின் சுருக்கும் வருமாறு:—சுயசெல்வாக்குடைய ஜில்லா போர்டுகளும், மற்ற தாலுக்கா போர்டுகளும், முனிசிபாலிட்டிகளும், நாட்டின் நலத்திற்கும் மக்களின் முன்னேற்றத்திற்கும் செய்யவேண்டியன பலவுள. மனிதன் அதிகாரம் நடத்துவதற்கான விடங்களென்று இச்சபைகளை எண்ணாமல் ஜனநலத்திற்கு ஏற்ற முயற்சிகள் செய்யுமிடமாகக் கொள்ளவேண்டும். எனக்கு அளித்த பத்திரத்தில் எல்லூர் ஜில்லா போர்டின் கல்வி முயற்சி குறிக்கப்பட்டிருந்தது. ஜில்லா போர்டுகள் கல்வி வளர்ச்சியையும் சுகாதார நலத்தையும் முதல் வேலையாகக் கவனிக்கவேண்டும்.

ஆந்திர சர்வகலாசாலையில் வர்த்தகக் கல்விக்காக ஒரு கல்லூரி ஏற்படவேண்டுமென்று ஜில்லா போர்டார் பத்திரத்தில் குறித்திருந்தனர். ஆந்திர சர்வகலாசாலை சிறிது சிறிதாக வேண்டுவனவெல்லாம் செய்யும் நோக்கமுடையதே.எனினும் அவசரப்படலாகாது.சீக்கிரத்தில் கைத்தொழில் வர்த்தகக் கல்விகளுக்குரியன செய்யப்படும். பெண்களுக்கென்றும் ஒரு கல்லூரி ஸ்தாபிப்பதற்கு முயற்சி செய்யப்படும்.

முடிவில், உபந்நியாசகர் தீண்டாமை விலக்கின் அவசியத்தை எடுத்துக் காட்டி ஸ்தல ஸ்தாபன சபைகள் இவ்விஷயத்தில் அதிகம் பாடுபடவேண்டுமென்றும் நமது சாஸ்திரங்கள் தீண்டாமையை ஆதரிக்கவில்லையென்றும் கூறினார்.

***

ஏழு வயதில் தாய்ப்பேறு:—டில்லியிலுள்ள விக்டோரியா ஜனாநா பிரசவ வயித்தியசாலை மேற்பார்வை அதிகாரி அறிவிப்பதாவது:-1932-ம் வருஷம் ஜுன் மாதம் 7-ந்தேதி இந்த வயித்திய சாலையில் 7 வயதுடைய பெண்ணிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இம்மாது 7 மாத கர்ப்பமாயிருக்கும்போது வயித்திய சாலைக்கு அழைத்து வரப்பட்டாள். 9-வது மாதத்தில் குழந்தை பிறந்தது. பிறந்தவுடன் குழந்தையின் எடை 4 பவுண்டு 3 அவுன்ஸ். இரண்டு மாதங்களுக்குப்பின் குழந்தையின் எடை 6 பவுண்டு 8 அவுன்ஸ் ஆயிற்று. இப்பொழுது குழந்தையும் தாயாரும் சுகமே யிருக்கின்றனர்.

***

ஜே. ஜீ. ஆண்டர்ஸன் நாடகக் கம்பெனியார், சென்னையில் காமத் எம்பையர் நாடகக்கொட்டகையில் இம்மாதம் 22, 23, 24, தேதிகளில் வென்னிஸ் வர்த்தகன் (Merchant of Venice), ஹாம்லட் (Hamlet), ஜுலியஸ் ஸீஸர் (Julius caesar) என்னும் ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடிப்பார்கள் என்று தெரிகின்றது.

***

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அபெண்டிஸிடிஸ் என்னும் வியாதிக்கு இரண சிகிச்சை செய்துகொண்ட ஸ்ரீமான் S. சத்யமூர்த்தி ஐயர் சுகமடைந்து வருகின்றார் என்று தெரிகின்றது. இவ்வார இறுதியில் வயித்தியசாலையிலிருந்து வீடு திரும்பக் கூடிய நிலையடைவார் என்று வயித்திய நிபுணர் அபிப்பிராயப்படுகின்றாராம்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம்; இல்லையேல், புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

18896

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.
ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, மூசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS

covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)